# புதிய ஜனநாயகம்



வை.கோ.வின் நடைபயணம்: ஒரு வெங்காயம்



## நீயும் நானும் ஒண்ணு சி.பி.எம்.வாயில மண்ணு!

www.padippakam.com

## "மறுகாலனியாக்கம் - பார்ப்பன பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம்!"

## — புரட்சிகர அமைப்புகளின் பிரச்சார இயக்கம்

நடைபயண யாத்திரை, சைக்கிள் ஊர்வலம், மாநாடுகள் என்று ஓட்டுக் கட்சிகள், அடுத்தத் தேர்தலைக் குறி வைத்து மக்களிடம் தம்மை விளம்பரப் படுத்தி வரும் வேளையில், இந்த ஓட்டுப் பொறுக்கிகளை அம்பலப்படுத்தி "காங்கிரசு கூட்டணியின் வெற்றி மறுகாலனியாக்கத்தையும் பார்ப்பன பாசிசத்தையும் ஒழித்து விடாது; நாடாளுமன்றத் தேர்தல் அரசியல் பாதையைப் புறக்கணித்துப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம்!" என்ற மைய முழக்கத்துடன் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

● உத்தமபாளையம் வட்டம், தேவாரம் வி.வி.மு. கிளை சார்பில் "விவசாயிகளைக் கொல்லும் நவீன விவசாயம்" என்ற தலைப்பில் 29.8.04 அன்று அரங்கக் கூட்டம் நடத்தப்பட்டது. பன்னாட்டுக் கம்பெனிகளின் கொள்ளைக்காக நம் நாட்டு விவசாயம் நாசமாக்கப்பட்டு வருவதையும், ஏற்றுமதிக்கான விவசாயம் திணிக்கப்பட்டு வருவதையும், எந்த ஓட்டுக் கட்சியும் இதற்கெதிராகப் போராட முன்வராமல் இருப்பதையும், புரட்சிகர அமைப்புகளில் திரண்டு விவசாயிகள் போராட வேண்டிய அவசியத்தையும் விளக்கிய இக்கூட்டம் பகுதி வாழ் விவசாயிகளிடம் புதிய நம்பிக்கையை விதைத்தது.

● தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில், 10.9.04 அன்று மறுகாலனியாக்கம் பார்ப்பன பாசிசத்துக்கு எதிராக வி.வி.மு. பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சியை நடத்தியது. துண்டுப் பிரசுரம், சுவரொட்டி, சுவரெழுத்து, ஆட்டோ பிரச்சாரம் என வீச்சாக நடந்த பிரச்சாரத்தால், எந்த ஓட்டுக்கட்சிக் கூட்டத்துக்கும் இல்லாத வகையில் பெருமளவில் உழைக்கும் மக்கள் திரண்டு வந்து ஆதரித்தனர்.

● விருதுநகரில் பு.மா.இ.மு., ம.க.இ.க. ஆகிய அமைப்புகள் இணைந்து "தண்ணீரைத் தனியார்மயமாக்காதே! சிறு தொழில்களை அழிக்காதே!" என்ற முழக்கத்துடன் பிரச்சாரத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக 11.9.04 அன்று தேசபந்து மைதானத்தில் பொதுக் கூட்டம் - கலை நிகழ்ச்சியை நடத்தின. தண்ணீரைக் கொள்ளையடிக்கும் கோக் - பெப்சி நிறுவனங்களைத் தடை செய்யவும், இயந்திரத் தீப்பெட்டி உற்பத்தியைத் தடை செய்யவும் உலக வர்த்தகக் கழகத்திலிருந்து இந்தியாவை வெளியேறக் கோரியும் நடந்த இப்பொதுக் கூட்டம், பகுதி வாழ் உழைக்கும் மக்களிடமும் சிறு தொழில் முதலாளிகள் மற்றும் வியாபாரிகளிடம் பேராதரவு பெற்றது.

● "நாட்டை மீண்டும் காலனியாக்காதே! மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே!" என்ற முழக்கத்துடன் கடலூரில் 16.9.04 அன்று பு.மா.இ.மு. பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சியை நடத்தியது. பலமுறை பொதுக்கூட்டத்துக்கு போலீசார் அனுமதி மறுத்து வந்த நிலையில், உயர்நீதி மன்றத்தில் மனு செய்து நீதிமன்ற உத்தரவின் படி இக்கூட்டத்துக்கு போலீசு அனுமதி அளித்தது. ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றிய இப்பொதுக் கூட்டமும், ம.க.இ.க. மைய கலைக்குழுவினர் நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சியும் உழைக்கும் மக்களிடம் போராட்ட உணர்வூட்டுவதாக அமைந்தன.

● "காவிரியின் கடைமடை பகுதியான சீர்காழிக்குத் தண்ணீரைத் திறந்துவிடு! விவசாயிகளின் அனைத்து கடன்களையும் ரத்து செய்! விளைநிலத்தை அழிக்காதே! விவசாயிகளைக் கொல்லாதே!" எனும் முழக்கங்களுடன் சீர்காழி வட்ட வி.வி.மு. 19.9.04 முதலாக தெருமுனைக் கூட்டங்களை நடத்தியது. எந்த ஓட்டுக் கட்சிக்காரனும் விவசாயிகளை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை; நீங்கள்தான் விவசாயிகளிடம் உண்மையைச் சொல்கிறீர்கள் என்று இவ்வட்டார விவசாயிகள் இத்தெருமுனைக் கூட்டங்களில் திரளாகப் பங்கேற்று ஆதரித்தனர்.

கடலூரில் நடந்த புரட்சிகர கலை நிகழ்ச்சி.



## கல்வி தனியார்மயமாக்கலின் கொடூரத் தாக்குதல்: கண்டன ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறை தருமபுரி ஆதீனம் கல்லூரி மாணவி ஊர்மிளா தற்கொலையைக் கண்டித்தும் வைத்தீஸ்வரன் கோயிலில் பன்றித் தொழுவத்தைப் போல் இயக்கப்படும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியை இடமாற்றம் செய்யக் கோரியும் இவற்றுக்கெல்லாம் காரணமாக உள்ள கல்வி தனியார்மயமாக்கலின் விளைவைக் கண்டித்து சீர்காழி வட்ட பு.மா.இ.மு. சார்பாக சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில் 27.8.04 அன்று மாலை 4 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பு.மா.இ.மு., வி.வி.மு., மனித உரிமை பாதுகாப்புக் கவுன்சில் ஆகிய அமைப்புகளின் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர்.

எழுச்சியுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் விளைவாக, தனிவட்டாட்சியர் இடமாற்றம் செய்யப்பட்டார். புதிய விடுதி கட்டிட வேலைகள் நடந்து வருகின்றன. பு.மா.இ.மு.வின் வீச்சான இப்போராட்டம் மாணவர் - இளைஞர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

- புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, சீர்காழி.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 19
இதழ் 12
அக்டோபர் 2004

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.

# பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ். அடியொற்றி காங்கிரசு கூட்டணி ஆட்சி

ஆளும் காங்கிரசு தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு வெளியிலிருந்து ஆதரவு தெரிவித்து வரும் போலி இடதுசாரி கூட்டணி பத்து நாட்களுக்கு ஒருமுறை வீதம் தற்போது எச்சரிக்கை விட்டுக் கொண்டிருக்கிறது. ''குறைந்தபட்சப் பொதுத் திட்டத்துக்கு மாறாக, பல்வேறு பிரச்சினைகளிலும் இடதுசாரி எதிர்ப்புக் கொள்கைகளை மைய அரசு தொடருமானால், இடதுசாரிக் கூட்டணி தனது ஆதரவை விலக்கிக் கொண்டுவிடும்'' என்பதுதான் அதன் எச்சரிக்கை.

இடதுசாரிக் கூட்டணிக்கு நாடாளுமன்றத்தில் 61 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுடைய ஆதரவை விலக்கிக் கொண்டால், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆட்சி நிச்சயம் கவிழ்ந்துவிடும். ஆனாலும், இடதுசாரிக் கூட்டணியின் எச்சரிக்கை அல்லது மிரட்டலுக்கு காங்கிரசு தலைமையிலான ஐ.மு. கூட அரசு சிறிதும் பயந்ததாகத் தெரியவில்லை; அது தன்போக்கில் போய் கொண்டுதான் இருக்கிறது. பத்து நாட்களுக்கு ஒருமுறை மட்டுமில்லை; நாள்தோறும் இடதுசாரிக் கூட்டணி எச்சரிக்கை அல்லது மிரட்டல் விட்டால் கூட மத்தியில் ஆளுவோர் அசரமாட்டார்கள் என்பதுதான் உண்மை.

ஏனென்றால், இடதுசாரிகளின் இந்த எச்சரிக்கை - மிரட்டல் எல்லாம் வெறும் 'உதார்' தான்; தாங்கள் அரசை ஆதரிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி கிடையாது என்று ஆளும் ஐ.மு.கூ. அரசுக்கு நன்றாகவே தெரியும். பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வராமல் தடுக்க வேண்டுமானால், ஐ.மு.கூ. அரசை ஆதரித்து, பதவியில் நீட்டிக்கச் செய்தே தீரவேண்டும் என்ற அரசியல் நிர்பந்தத்தில் இடதுசாரிகள் சிக்கியிருக்கிறார்கள் என்பதைத் திட்டவட்டமாக நம்புகிறார்கள், காங்கிரசு கூட்டணியினர்.

மத்தியில் தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கும் சக்திவாய்ந்த அனைத்திந்தியக் கட்சி எதுவும் கிடையாது; அதேசமயம், கூட்டணி ஆட்சிதான் சாத்தியம் என்றாலும் அதற்கும் காங்கிரசு அல்லது பா.ஜ.க. ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்றுதான் அத்தகைய கூட்டணி ஆட்சிக்குத் தலைமையேற்க முடியும்; மூன்றாவது அணி என்பதெல்லாம் சாத்தியமே கிடையாது என்பது நிருபணமாகிவிட்டது. இந்த அரசியல் நிலைமையில், ஓட்டுச் சீட்டு அரசியலுக்குள் முடங்கிக் கிடக்கும் போலி இடதுசாரிகள், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கூட்டணியைவிட காங்கிரசு கூட்டணி முற்போக்கானது என்று பிரச்சாரம் செய்து, ஓட்டுப் பொறுக்கியதோடு அந்த அடிப்படையிலேயே காங்கிரசின் மத்திய ஆட்சிக்கு முட்டுக் கொடுத்து வருகின்றனர்.

காங்கிரசு, பா.ஜ.க. இரண்டுமே தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம், உலகமயமாக்கம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை ஆதரிப்பவைதாம்; என்றாலும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவா - வகுப்புவாத பாசிச சக்தி; அதற்கு மாறாக காங்கிரசு ஒரு மதச் சார்பற்ற சக்தி — இந்த விளக்க அடிப்படையில்தான் பா.ஜ.க. எதிர்ப்பு, காங்கிரசு ஆதரவு நிலையை இடதுசாரிக் கட்சிகள் மட்டுமல்ல, தி.மு.க. போன்ற சில ஐ.மு.கூ. கட்சிகளும் மேற்கொண்டன.

காங்கிரசு தலைமையிலான ஐ.மு. கூட்டணி ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே, பா.ஜ.க.வைவிட காங்கிரசு எந்தவகையில் முற்போக்கானது என்பதை நிருபிக்க வேண்டிய தீராத தலைவலி இடதுசாரிக் கட்சிகளுக்கு ஏற்பட்டு விட்டது. அதே சமயம் இந்த இடதுசாரிக் கட்சிகள் ஒரு தந்திரத்தை மேற்கொள்கின்றன. அதாவது, தமது மதிப்பீட்டின்படியே காங்கிரசு அதன் மதச்சார்பின்மையில் சரியான பாதையை மேற்கொண்டிருக்கும் அதேசமயம், ஏகாதிபத்திய சார்பு புதிய பொருளாதாரக் கொள்கையில் மட்டும் தவறு செய்து வருவதாகக் காட்டி, காங்கிரசு தலைமையிலான மைய அரசுக்கு எதிராக எச்சரிக்கை மிரட்டல் விடும் நாடகமாடி வருகின்றன.

ஆனால், தாராளமயமாக்க - புதிய பொருளாதாரக் கொள்கையில் மட்டுமல்ல, தனது மதச்சார்பற்ற கொள்கையும் கூட பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு இணக்கமானதுதான் என்றே காங்கிரசு தலைமையிலான ஐ.மு.கூ. நிருபித்து வருகிறது. இந்த ஆட்சி உண்மையிலேயே மதச்சார்பற்றது என்றால் என்ன செய்திருக்க வேண்டும்? பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இரண்டு முக்கிய மதவெறிக் குற்றங்களான அயோத்தி பாபரி மசூதி இடிப்புக்கும் அதைத் தொடர்ந்து நடத்திய மதவெறியாட்டங்களுக்கும், குஜராத் மதவெறிப் படுகொலைகளுக்கும் காரணமானவர்களுக்குத் தக்க

www.padippakam.com

தண்டனை கொடுத்திருக்க வேண்டுமல்லவா? இந்தக் குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களும் பாதுகாப்பும் வழங்கியிருக்க வேண்டுமல்லவா?

அப்படிச் செய்திருந்தால்தான் இந்துமதவெறி பாசிசச் சக்திகள் அடங்கிப் போயிருக்கும். அதற்கு மாறாக, அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் போட்டதைவிடக் கொஞ்சமும் குறையாத அளவுக்கு இப்போது வெறியாட்டம் போடுகிறார்கள். இதிலிருந்தே தெரிகிறது, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு இணக்கமான - பாபரி மசூதி இடிப்பின்போது மறைமுக ஆதரவு கொடுத்ததைப் போன்ற - அணுகுமுறையைத்தான் இப்போதும் காங்கிரசு மேற்கொண்டு வருகிறது.



சாவர்க்கரை விமர்சித்த மணிசங்கர் அய்யரின் உருவப் பொம்மையைச் செருப்பால் அடித்து அவமதிக்கும் சிவசேனா தலைவர் பால் தாக்கரே மற்றும் மனோகர் ஜோஷி. இந்த எதிர்ப்புக்கே பயந்து போன காங்கிரசு, அது மணிசங்கர் அய்யரின் சொந்தக் கருத்து எனக் கூறிப் பதுங்கிக் கொண்டது.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் மத்திய ஆட்சியில் இருந்த காலத்தில், மத்தியப் புலனாய்வு அமைப்பைத் தனது கைப்பாவையாக ஆக்கிக் கொண்டு அயோத்தி பாபரி மசூதி இடிப்பு வழக்கைப் பல்பிடுங்கப்பட்ட பாம்பாக்கி விட்டது. குறிப்பாக, முக்கியக் குற்றவாளியான பாசிச அத்வானியைக் குற்றப்பட்டியலில் இருந்து நீக்கி விடும் வகையில் வழக்கு திருத்தியமைக்கப்பட்டது. முக்கியச் சாட்சிகளான இரண்டு பத்திரிக்கையாளர்களும், ''அப்ரூவர்களாக'' மாறிய கரசேவகர்களும் விசாரிக்கப்படவே இல்லை. எல்லாவற்றையும் விட முக்கியமாக மசூதி இடிப்புக்கு அடிப்படையான சதிக் குற்றச்சாட்டு கைவிடப்பட்டு விட்டது. விசாரணையும் ஆமை வேகத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது.

புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற காங்கிரசு இந்தத் தில்லுமுல்லுகளைச் சரிசெய்யும் முயற்சி எதையும் காட்டவில்லை. வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தும் முயற்சியை காணோம். முக்கியமாக, அயோத்தி வழக்கின் அடிப்படைச் சிக்கலாகக் கருதப்படும் பாபரி மசூதி இருந்த இடத்தின் நிலவுடைமையாளர் பற்றிய வழக்கு கிணற்றில் போட்ட கல்லாக ஐம்பது ஆண்டுகளாகியும் சற்றும் நகரவே இல்லை.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். ஆட்சிக் காலத்தில் முழுக்கவும் பார்ப்பன ஆதிக்கம் - செல்வாக்கின் கீழ் உள்ள அலகாபாத் உயர்நீதி மன்றம் ஒரு புது உத்தரவு போட்டது. பாபரி மசூதி இருந்த இடத்தில், அதற்கு முன்பு இந்துக் கோவில் இருந்ததா என்று அகழ்வாராய்ச்சி நடத்தும்படி இந்திய அகழ்வாய்வு நிறுவனத்துக்கு ஒரு அவசரகோல உத்தரவு போடப்பட்டது. இந்த அகழ்வாராய்ச்சியில் ஆர்.எஸ்.எஸ். ஆதரவு 'வல்லுநர்கள்' ஈடுபடுத்தப்பட்டனர். ஏற்கெனவே வெளியிலிருந்து தூண்களைக் கொண்டு வந்து போட்டு போலியான ஆதாரங்களை உருவாக்கி இருந்ததைப் போலவே, இப்போதும் அக்கும்பல் தனது கைவரிசையைக் காட்டியது; அங்கு இந்துக் கோவில் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக மீண்டும் நாடகமாடியது. இப்படிப்பட்ட பித்தலாட்ட அடிப்படையிலான அகழ்வாய்வு அறிக்கையை விலக்கிக் கொள்ளும் நடவடிக்கை எதையும் காங்கிரசு அரசு எடுப்பதாகத் தெரியவில்லை.

அயோத்தி பாபரி மசூதிக்குள் இராமன் பொம்மையை மதவெறியர்கள் வைத்தபோது, அதைத்தூக்கி எறிந்து, குற்றவாளிகளைத் தண்டிக்கத் தவறி, இசுலாமியரின் தொழுகை உரிமையை மறுத்து, மசூதியைப் பூட்டி வைத்தது; சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த இராமன் பொம்மைக்கு பூசை போட அனுமதித்துப் பூட்டைத் திறந்து விட்டது; அரை நூற்றாண்டாகியும் மசூதி நிலவுடைமை வழக்கை முடிக்காமல் இழுத்தடிப்பது; மசூதி இடிப்பு மற்றும் தற்காலிகக் கோவிலில் வழிபாடு நடத்த அனுமதித்தது; இந்துமதவெறிப் படுகொலைக் குற்றங்களுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்க மறுப்பது என்று எல்லா வகையிலும் ஆர்.எஸ்.எஸ். பாசிஸ்டுகளுக்குத் துணைபோவதே காங்கிரசு ஆட்சியாளர்களின் வரலாறாக உள்ளது.

இப்போதும் கூட அயோத்தியில் இராமன் கோவில் கட்டுவதற்காகப் பல கோடி ரூபாய் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நிதி திரட்டப்பட்டுள்ளது; அதை வைத்து பழங்குடி மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே நூற்றுக்கணக்கான தொண்டு அமைப்புகளை உருவாக்கி, மதவெறியூட்டி, சிறுபான்மையினருக்கு எதிராக படைதிரட்டுகிறார்கள். பல மாநிலங்களிலும் திரிசூலம் விநியோகிக்கும் விழாக்கள் நடத்தப்படுகின்றன. மசூதிகள், தர்காக்கள், கிறித்துவ ஆலயங்களைக் கைப்பற்றி, இடித்து இந்துக் கோவில்கள் கட்டுவதற்கான இயக்கங்கள் நடத்துகிறார்கள். இசுலாமியரும் கிறித்தவர்களும் தாக்கப்படுகின்றனர். திருப்பூரில் வலது கம்யூனிஸ்டு அலுவலகங்கள் தாக்கப்பட்டுள்ளன. கேரளாவில் தெரசாவின் கருணை இல்லத் துறவிகள் தாக்கப்பட்டிருக்கின்றனர். இராஜஸ்தான், மராட்டியம், குஜராத்தில் தர்காக்களைக் கைப்பற்றும் எத்தனிப்புகள் நடந்துள்ளன. ஒரிசாவில் கிறித்துவ வழிபாட்டுத் தலங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. ஆட்சி அதிகாரத்தை இழந்தபிறகும் இத்தகைய துணிச்சல் அவர்களுக்கு எப்படி வந்தது?

ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா, பஜ்ரங் தள், விசுவ இந்து பரிசத் போன்ற இந்து மதவெறி அமைப்புகளை ஒடுக்குவதற்கும், அவர்களின் கொலைவெறிச் செயல்களைத் தடுப்பதற்கும் எந்த


படிப்பகம்

www.padippakam.com

வொரு நடவடிக்கையும் காங்கிரசு தலைமையிலான ஐ.மு.கூ. அரசு மேற்கொள்ளவில்லை. குறிப்பாக, இந்துமத வெறி நஞ்சு உமிழும் பால்தாக்கரே, பர்வீன் தொக்காடியா, கிரிராஜ் கிஷோர் போன்றவர்களைக் கைது செய்து தண்டிக்க முடியும்; அயோத்தியிலும், இராஜஸ்தானிலும் நடக்கும் ராமன் கோவில் கட்டுவதற்கான சிலைகள் வடிக்கும் இடங்களைக் கைப்பற்றி அழிக்க முடியும், மதவெறி அமைப்புகளைத் தடை செய்ய முடியும்; அவற்றின் நிதியை முடக்கி வைக்க முடியும்; அவற்றின் கொள்கைப்பரப்பு சாதனங்களைப் பறிமுதல் செய்ய முடியும். இவை எதையும், மதச்சார்பற்றது என்று போலி இடதுசாரிகளின் நற்சான்றிதழ் பெற்ற மத்திய அரசு மேற்கொள்ளவே இல்லை. எனவேதான் அவர்கள் சுதந்திரமாக நாடு முழுவதும் முழுவீச்சில் மதவெறிச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

உண்மையில் மதச்சார்பற்ற சக்தி என்றால், இந்த அரசு உடனடி உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய இன்னொரு விவகாரம் குஜராத் பிரச்சினை. கோத்ரா இரயில் எரிப்பு நிகழ்வைக் காரணங்காட்டி, சமீப வரலாற்றிலேயே மிகவும் கோரமான பேரழிவு மதவெறியாட்டத்தை பாசிச நரேந்திர மோடி தலைமையிலான அரசு எந்திரமே முன்னின்று நடத்தியது.

காட்டுமிராண்டித்தனமான கொலை, பாலியல் வன்முறை, கொள்ளை, சூறையாடல், தீவைப்பு என சுமார் 4,200 குற்றச் சம்பவங்கள் நடந்துள்ளன. இசுலாமியரின் 700 வழிபாட்டுத் தலங்கள் இடித்து நொறுக்கப்பட்டன. 2000-க்கும் மேற்பட்டோர் எரித்தும், வெட்டியும், அடித்தும் குரூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். 500-க்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைக்குப் பலியாயினர். ஐந்து முதல் ஏழாயிரம் கோடி ரூபாய்கள் வரையிலான சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன. இன்னமும் 3000 குடும்பங்கள் அதாவது 20,000 பேருக்கு மேலான இசுலாமியர்கள் அகதிகள் முகாமில் அனாதைகளாக வதைபடுகின்றனர்.

இந்தக் கொடுமைகளுக்குக் காரணமான குற்றவாளிகளில் ஒருவர்கூடத் தண்டிக்கப்படவே இல்லை. குடிசை போட்டு வாழவும் போதாத அளவுக்கான நிவாரணத் தொகைதான் பெரும்பாலான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதைவிட முக்கியமாக அகதிகள் முகாம்கள் மீதே வெடிகுண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தும் இந்து பாசிசக் குண்டர்கள், அகதிகளாக வாழும் இசுலாமியக் குடும்பங்கள், தமது முந்தைய வாழ்விடங்களுக்குத் திரும்பினால் கொல்லப்படுவார்கள் என்று மிரட்டுகிறார்கள். நரேந்திரமோடி தலைமையில் அடிக்கடி "யாத்திரை"கள் நடத்தி பயங்கவாதப் பீதியூட்டுகின்றனர். மத்தியில் புதிய அரசு அதிகாரத்துக்கு வந்தபிறகும் குஜராத்தில் இசுலாமியச் சிறுபான்மையினரின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பில்லை.



இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்ட கேரளாவைச் சேர்ந்த கிறித்தவ கன்னித்துறவி குசுமம்.

நரேந்திரமோடி உட்பட குஜராத் படுகொலையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் ஒழிய அங்கு சிறுபான்மை சமூகத்தினர், அச்சமின்றி வாழும் நிலைமை தோன்றாது. "பெஸ்ட் பேக்கரி" போன்ற ஓரிரு வழக்குகளை மட்டுமே, அதுவும் தொண்டு நிறுவனங்களின் முன்முயற்சியினால் உச்சநீதி மன்றம் தலையிட்டு வேறு மாநிலங்களில் விசாரணை நடப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 2000 வழக்குகளில் இந்துமதவெறி பாசிச அரசின் தில்லுமுல்லுகள் - அடாவடிகள் காரணமாக குற்றவாளிகள் தொடர்ந்து தப்புவிக்கப்படுகின்றனர். இதிலெல்லாம் எந்த வகையிலும், தலையீடு செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதன் மூலம் குஜராத்தில் மதவெறிக் கொடூரம் தொடர்வதற்கு பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுடன் ஒத்துழைக்கிறது, காங்கிரசு தலைமையிலான ஐ.மு. கூட்டணி அரசு. பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ்.-இன் இந்து மதவெறியர்களைப் போலவே காங்கிரசும் கொடூரமான அபாயகரமான பாசிச சக்தி என்பதை "பொடா" என்ற பயங்கரவாதச் சட்ட நீக்கம் மற்றும் அதற்கு மாற்று ஒடுக்குமுறைச் சட்ட நிறைவேற்றத்திலும் குறிப்பாக, ஆயுதப் படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்ட அமலாக்கத்திலும் காணலாம்.

"பொடா" என்றாலே போலீசு அக்கிரமம், சட்ட நெறிமுறை மீறல், சித்திரவதை, பொய்சாட்சி, ஆயுதங்களைத் திருட்டுத்தனமாக வைத்துவிட்டுக் கைது செய்வது, அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவது, சமூக சேவகர்கள் முதல் பள்ளிச் சிறுவர் - சிறுமியர்கள் மீதும் பாயும் சட்டம் என்றுதான் உள்ளது. முன்னாள் நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், பிரபல வழக்கறிஞர்கள் இப்படிப் பலரும் இதை நிரூபித்துள்ளனர்.

குஜராத்தைப் பொருத்தவரை "பொடா"வின் நோக்கமே, பொருளே, விளைவே இந்து மத வெறி அடிப்படையிலானதுதான். "பொடா"வின் கீழ் அங்கு கைது செய்யப்பட்ட 280-க்கும் மேற்பட்டவர்களில் ஒருவர் சீக்கியர், மற்ற அனைவரும் இசுலாமியர்கள். சந்தேகத்துக்குரியவர்களின் உறவினர்கள் கூட "பொடா" சட்டத்தைக் காட்டி இழுத்துச் செல்லப்பட்டு சிறையிலடைத்து சித்திரவதை செய்யப்பட்டனர்.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கூட்டணி தவிர அனைத்துக் கட்சிகளுமே "பொடா"வை எதிர்த்தன. (ராமதாசின் பா.ம.க. மட்டுமே அணிமாறும் கடைசி நேரம் வரை "பொடா"வை ஆதரித்தது; அணிமாறிய பிறகே அதை எதிர்ப்பதாக நாடகமாடுகிறது). எனவேதான், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.மு. கூட்டணி, "பொடா"வை உடனடியாக நீக்கி விடுவதாக வாக்குறுதியளித்தது. அதை நம்பும்படி அதோடு சேர்ந்து போலி இடதுகள் ஆதரவு திரட்டினர்.

ஆனால், ஐ.மு.கூ. ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்களாக சப்பாணியைப் போலக் காலை இழுத்துக் கொண்டே வந்து தற்போது ஒரு அவசரச் சட்டம் போட்டு "பொடா"வை நீக்கி


படிப்பகம்

யிருக்கிறது. அதுவும், ஏற்கெனவே ''பொடா''வின் கீழ் புனையப்பட்டுள்ள வழக்குகள் இரத்துச் செய்யப்பட மாட்டாது, அந்தச் சட்டத்தின்படியே விசாரிக்கப்படும் என்ற அடிப்படையில். பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஆளும் மாநிலங்களில் மட்டுமல்ல, காங்கிரசு மற்றும் போலி இடதுகள் ஆளும் மாநிலங்களில் கூட ''பொடா'' கேடாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

எனவேதான், ஓட்டுப் பொறுக்குவதற்கு மட்டுமே ''பொடா'' எதிர்ப்பு நாடகமாடியவைதான் ஐ.மு. கூட்டணி மற்றும் இடதுசாரி கூட்டணி.

அதனால்தான் ''பொடா''வுக்கு மாற்றாக சட்ட விரோத தடுப்புச் சட்டங்கள் தடுப்புச் சட்டம் என்ற இன்னொரு சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, அதை மேலும் கடுமையாக்கும் திருத்தங்கள் செய்ய முனைந்திருக்கிறது ஐ.மு.கூ. அரசு. இதன் கீழ் பயங்கரவாதம், பயங்கரவாத அமைப்புகள் தடை, தடுப்புக் காவல், கைதுகள், ஒப்புதல் வாக்குமூலங்கள் போன்ற பல அம்சங்களிலும் ''பொடா''வைப் போலவே புதிய சட்டமும் பாசிசப் பண்புகள் கொண்டதாக இருக்கும்.

ஆனால், ''பொடா''வை விடக் கொடூரமான, பாசிசச் சட்டம் ஆயுதப் படைகள் (சிறப்பு அதிகாரம்) சட்டம் ''அட்சபா'' என்பதைத் தீவிரமாகவும் கடுமையாகவும் அமலாக்குவதில் உறுதியாக நிற்கிறது காங்கிரசு தலைமையிலான ஐ.மு. கூட்டணி அரசு. 1942 ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தை ஒடுக்குவதற்காக அவசரச் சட்டமாகக் காலனிய ஆட்சியாளர்களால் போடப்பட்டதுதான் இந்த ''அட்சபா''. இதுவே 1958-இல் இராணுவத்துக்கு வரம்பற்ற அதிகாரத்தை வழங்கும் சட்டமாகியது. வடகிழக்கிந்திய மாநிலங்களிலும் காசுமீரிலும் பல ஆண்டுகளாக அமலில் இருக்கும் இந்தச் சட்டத்தின்படி, ஒரு பகுதியோ, மாவட்டமோ, மாநிலமோ ''கலவரப்பகுதி'' என்று அறிவிக்கப்பட்டு விட்டால் போதும், அந்தப் பகுதியின் முழு அதிகாரத்தையும் கையில் எடுத்துக் கொள்ளும் இராணுவம், எந்த இடத்திலும் நுழையவும், அழிக்கவும், யாரையும் கைது செய்து கொல்லவும் இராணுவத்துக்கு அதிகாரமளிக்கிறது. இதற்கு எதிராக வழக்குப் போடவோ, விசாரிக்கவோ, கேள்வி கேட்கவோ முடியாது. மத்திய அரசின் முன் அனுமதி பெற்றுத்தான் வழக்குப் போடவே முடியும். யாரை வேண்டுமானாலும்,எந்தவித ஆதாரமும் காட்டாமல் ''சந்தேகத்திற்குரியவர்'' என்று கருதினாலே கொன்று விடலாம். இந்தச் சட்டத்தின்படி இந்திய இராணுவமே, நீதிபதி, வழக்குரைஞர், விசாரணை அதிகாரி, தண்டனையை நிறைவேற்றுபவர் எல்லாம்.



மணிப்பூரைக் கலவரப் பகுதியாக அறிவித்துள்ள சட்டத்தை - கலவரப் பகுதி சட்டம் - நீக்க வேண்டும் எனக் கோரி கடந்த நான்கு ஆண்டுகளாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும் ஷர்மிளா. அவரைச் சந்தித்துப் போராட்டத்தைக் கைவிடக் கோரும் மணிப்பூர் முதல் மந்திரி இபோபி சிங்.

''அட்சபா'' சட்டத்தின் கீழ் அப்பாவி மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டதால் இச்சட்டம் அமலில் உள்ள மாநில மக்கள் இராணுவத்திற்கு எதிரான ஆத்திரம் - வெறுப்பில் உள்ளனர். இச்சட்டத்தை நீக்கும்படி நான்காண்டுகளாக மணிப்பூரில் ஷர்மிளா என்ற இளம் பெண் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து போராடி வருகிறார். இரண்டு மாதங்களுக்கு முன்பு தங்கஜம் மனோரமா என்ற மணிப்பூரி பெண்ணை இழுத்துக் கொண்டு போய் பாலியல் வன்முறை, சித்திரவதை செய்து வக்கிரமான முறையில் சுட்டுக் கொன்று, வீதியில் வீசியபோது மணிப்புரி மக்கள் பொங்கி எழுந்து போராடி வருகின்றனர்.

காங்கிரசின் போலீசு மந்திரி, இராணுவ மந்திரி, மாநில மந்திரி, இராணுவத் தளபதி ஆகிய அனைவருமே, கொடூரமான பாசிஸ்டுகளைப் போல நடந்து கொண்டு, மேலும் மேலும் இராணுவ வெறியாட்டத்தை ஏவி விடுகின்றனர். அத்வானிக்கும் சிவராஜ் பாட்டிலுக்கும், பெர்னான்டசுக்கும், பிரணாப் முகர்ஜிக்கும், மன்மோகன் சிங்குக்கும், வாஜ்பாயிக்கும் வேறுபாடின்றி நடந்து கொள்கின்றனர்.

நியாயமான வழக்கு விசாரணை உரிமை, தற்காப்பு மற்றும் மேல்முறையீடு உரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை, அமைப்பாகும் உரிமை, சட்டத்தின் முன் அனைவரும் சமம், ஏன் உயிர் வாழும் உரிமையையே கூட ''அட்சபா'' சட்டம் கேலிக் கூத்தாக்கி விடுகிறது. இந்தக் கொடிய சட்டத்தை நீக்கும்படி கோரி குமுறும் மணிப்புரி மக்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குகிறது காங்கிரசு தலைமையிலான ஐ.மு.கூட்டணி அரசு.

இந்த அரசின் பாசிசப் பண்புகளை இரண்டு எதிர் எதிர் நிலைகளில் நின்று இடதுசாரி கூட்டணியும், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். -ம் மூடி மறைக்கின்றன. இதெல்லாம் பிரச்சினை அல்ல; புதிய பொருளாதார கொள்கைப் பிரச்சினைகளில் மட்டுமே இந்த அரசு தவறு செய்வதாகக் கூறி ஒரு நிழல் சண்டை போடுகிறது இடதுசாரி கூட்டணி. பாஜ.க. - ஆர்.எஸ்.எஸ்ஸோ மத்தியில் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கான மந்திரிகளை நீக்குவது, அந்தமானில் அகற்றப்பட்ட சாவர்க்கரின் நினைவுத் தூணை மீண்டும் நிறுவுவது ஆகிய பிரச்சினைகளை எழுப்பிக் கூச்சல் போட்டுக் கொண்டே, ஐ.மு. கூட்டணி அரசின் வரவு-செலவுத் திட்டம் உட்பட பல நிதி மசோதாக்களை விவாதம் - எதிர்ப்பு இல்லாமலேயே நிறைவேற்றித் தருகிறது. ஆக, காங்கிரசு - பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். ஆகிய இந்தக் கூட்டுக் களவாணிகளின் கொள்கையும் நடைமுறையும் ஒன்றுதான். ஆனால், இரு தரப்புக்குமிடையே ஏதோ அடிப்படை வேறுபாடு இருக்கிறதென்று கூறி மக்களை ஏய்த்து வருகின்றன, போலி இடதுசாரி கட்சிகள். ●



படிப்பகம்

www.padippakam.com



## "பொடா" சட்டத்தைப் பின் தேதியிட்டுத் திரும்பப் பெறு!"

# சிறைச்சாலையிலிருந்து எழுந்த இடிமுழக்கம்!

2002-ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் ''பொடா''வின் கீழ் கைது செய்யப்பட்ட முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்த 25 தோழர்கள் - இவர்களுள் ஆறு பேர் பெண்கள் - 22 மாதங்களாக, பிணைகூட வழங்க மறுக்கப்பட்டு, சிறையில் வதைக்கப்படுகின்றனர்.

தமிழகத்தில் ''பொடா''வின் கீழ் கைது செய்யப்பட்ட வை.கோ., நக்கீரன் ஆசிரியர் கோபால் ஆகிய அரசியல் செல்வாக்குமிக்கவர்களைப் பிணையில் விடுதலை செய்ய நீதிமன்றம் காட்டிய அக்கறையும், வேகமும் இந்தத் தோழர்களுக்குக் கிடைக்கவில்லை. உ.பி.யில், மாயாவதி ஆட்சியின் பொழுது ''பொடா''வில் கைது செய்யப்பட்ட ராஜா பைய்யா என்ற அரசியல் கிரிமினல் பேர்வழிகூட இன்று சிறையில் இருந்து வெளியே வந்துவிட்டான். ஆனால், மு.இ.அணி தோழர்கள் தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்க்கும் நக்சல்பாரி புரட்சியாளர்கள் என்ற அரசியல் காரணத்துக்காகவே, அவர்களுக்குப் பிணை மறுக்கப்படுகிறது.

''பொடா'' சட்டத்தை ஆராய்ந்த உச்சநீதி மன்றம், ''பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள், சிறையில் அடைக்கப்பட்டு ஒரு வருடம் கழிந்து விட்டால், அவர்களுக்குச் சாதாரண குற்றவியல் சட்டங்களின்படியே பிணை வழங்கலாம்'' என கடந்த ஆண்டே உத்திரவிட்டது.

இத்தீர்ப்புக்குப் பின், தங்களைப் பிணையில் விடக் கோரி பெண் தோழர்கள் பூந்தமல்லி ''பொடா'' சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிணை மனு நிராகரிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் பிப். 26, 2004 அன்று இத்தோழர்கள் தாக்கல் செய்த மனுவை, உயர்நீதி மன்றம் இதுநாள் வரையில் விசாரணைக்கே எடுத்துக் கொள்ளவில்லை. இப்பிணை மனுவை விசாரிப்பதை, இதுவரை உயர்நீதி மன்றத்தின் மூன்று அமர்வு நீதிமன்றங்கள் விசாரிக்காமல் தட்டிக் கழித்து விட்டன.

இவ்வழக்கு தொடர்பாக, நீதிமன்றத்தின் அனுமதியோடு 26 பேரிடமிருந்து இரகசியமான முறையில் (சாட்சிகள் யார் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அடையாளம் காட்டாமலேயே) சாட்சியங்களை வாங்கிப் பதிவு செய்திருக்கிறது, தமிழக அரசு. அந்த 26 பேர் அளித்துள்ள சாட்சியங்கள் தங்களுக்குத் தரப்பட வேண்டும் என இவர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மறுபரிசீலனை மனுவும் தள்ளுபடியாகி விட்டது. இத்தோழர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உரிய முறையில் விசாரிக்கப்படாமலேயே, நீதிமன்றம் - தமிழக அரசின் கூட்டுச் சதியால் தண்டிக்கப்பட்டு வருகின்றனர்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, ஒரு அவசர ஆணையின் மூலம் ''பொடா'' சட்டத்தை நீக்கியிருந்தாலும், அச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை ரத்து செய்ய மறுத்து விட்டதால், மு.இ. அணி தோழர்கள் சட்டவிரோதமான முறையில் தண்டிக்கப்பட்டு வருவது தொடரவே செய்கிறது. இந்த நிலையில், மைய அரசு அவசர ஆணையைப் பிறப்பிப்பதற்கு முன்பாகவே, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள மு.இ. அணி தோழர்களுள் ஏழு பேரும்; வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண் தோழர்களுள் மூன்று பேரும், ''பொடா சட்டத்தை முன் தேதியிட்டு திரும்பப் பெறுவதோடு, அச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டு, அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் விசாரணை நடவடிக்கைகளும் முற்றாக நீக்கப்பட வேண்டும்'' என்ற கோரிக்கையை முன் வைத்து, 26.08.2004 தொடங்கி சிறைச்சாலையிலேயே உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர்.

**முற்போக்கு இளைஞர் அணி தோழர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உரிய முறையில் விசாரிக்கப் படாமலேயே, நீதிமன்றம் - தமிழக அரசின் கூட்டுச் சதியால் தண்டிக்கப்பட்டு வருகின்றனர்.**

''பொடா''வை வீழ்த்திய கதாநாயகர்கள் போலத் தங்களைக் காட்டிக் கொள்ளும் கருணாநிதியோ, வை.கோ.வோ, இராமதாசோ மு.இ.அணி தோழர்களின் நியாயமான, ஜனநாயகப் பூர்வமான கோரிக்கையை ஆதரித்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பல்வேறு மனித உரிமை அமைப்புகள்தான் இப்போராட்டத்தின் நியாயத்தை பத்திரிகைகள் மூலம் மக்கள் மத்தியில் கொண்டு சென்றன; புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அனைத்துக் கருப்புச் சட்டங்களை நீக்கக் கோரியும் சுவரொட்டி இயக்கம் நடத்தியது.

உண்ணாவிரதம் இருந்த தோழர்களுக்கு வலுக்கட்டாயமாக ''குளுக்கோஸ்'' ஏற்றி உண்ணாவிரதம் தொடராமல் முறியடிக்க சிறை அதிகாரிகள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியடைந்தன. ஏறத்தாழ 18 நாட்கள் நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் பொழுது இரண்டு தோழர்களுக்கு இரத்தப் போக்கு ஏற்பட்டு, அவர்களின் உடல்நிலை மோசமடைந்தது. அந்த இரு தோழர்களையும் சென்னை அரசினர் மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சையளிக்க வேண்டும் எனக் கோரி, மனித உரிமை ஆர்வலர்கள் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தோழர்களை மனித உரிமை அமைப்புகள் சிறைச்சாலைக்

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

# வை.கோ.வின் வெங்காய மறுமலர்ச்சி நடைபயணம்

40 நாட்கள், 1000 கிலோ மீட்டர்கள் நடந்து தனது நடைபயணத்தை முடித்தார், வை.கோ. நெல்லை, தாமிரபரணி ஆற்றங்கரையில் தொடங்கி, 3000 தொண்டர்களுடன் நடைபயணமாக சென்னை கூவம் ஆற்றின் தீவுத்திடலை வந்தடைந்தார்.

சென்னை நகரில் நுழைவதற்கு தடை விதித்த தமிழக அரசின் கண்களில் 'மண்ணைத் தூவி' விட்டு திடீரென, ரகசியமாக, நள்ளிரவு 2 மணி நேரத்தில் 14 கிலோ மீட்டரை ஓட்டமும் நடையுமாகக் கடந்து இலக்கை அடைந்தார். போலீசும் வை.கோ.வும் ஒருவருக்கொருவர் 'நாகரீகமாக' ஒத்துழைத்தனர். அரைநாள் போலீசுக் காவலில் இருந்து, நடைபயண வெற்றிவிழா இறுதி பொதுக்கூட்டத்திற்கு போலீசு பாதுகாப்புடன் உரிய நேரத்தில் ''வெற்றி வீரராக'' வந்தடைந்தார், வை.கோ. ''திட்டமிட்டபடி நடைபயணம் வெற்றிகரமாக நடந்துவிட்டது(!)இதில் மிகுந்த மகிழ்ச்சி'' என்று தெரிவித்தார்.

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக் கோரி நாடாளுமன்றத்தில் பேசியது, வாஜ்பாயிடம் மனுக் கொடுத்ததெல்லாம் மாபெரும் சாதனை எனப் பீற்றிக் கொண்டார். உண்மையில் சேது சமுத்திரத் திட்டம் 144 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தங்கள் கடல் வாணிப மேலாதிக்கத்திற்கு தயாரித்த வரைவு திட்டம்.

மேலும், ''காவிரியில் தமிழ்நாட்டுக்கு உரிய நீரைத் தரமறுக்கும் கர்நாடகத்தின் பாசிச, பிரிவினைவாத போக்கை மத்திய அரசு முளையிலேயே (?!) கிள்ளி எறிய வேண்டும்'' என்றார். முத்தாய்ப்பாக, ''காவிரியில் தனக்குரிய நீரைப் பெறமுடியாமல் நீண்ட காலமாகவே தவித்து வரும் தமிழ்நாட்டுக்கு நதிநீர் இணைப்புத் திட்டம்தான் ஒரே தீர்வாக இருக்க முடியும்'' என்றார்.

வை.கோ.வின் மடியிலிருந்த பிழைப்புவாதம் இப்படி நடைபயணமாக துள்ளிக் குதித்து ஓடியது.

ஈழத்தமிழருக்காக சவடால் அடிப்பது, உலகத்தமிழர்களுக்காக கண்ணீர் வடிப்பது, உள்ளூர் தமிழர்களின் உரிமையை மிதிப்பது – இதுதான் தமிழினகும்பலின் தவப்புதல்வன் வை.கோ. தொடர் துரோகத்துக்கு ஆளாகி நைந்து கிழிந்துபோன பிழைப்புவாத திராவிட அரசியலின் சமீபத்திய கதாநாயகன் தான் இந்த வை.கோ.

இப்போது, திராவிட இயக்கம் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருப்பதாகவும் திராவிடக் கொள்கைகள் நீர்த்துப் போய்விட்டதாகவும் அதற்கு புத்துயிர் கொடுப்பதுதான் தனது முதல்வேலை என்றும் முகத்தை சிங்கம் போலாக்கி கர்ஜித்தார், வை.கோ. பொடா சிறையிலிருந்து மீண்ட வை.கோ.வை பேட்டி கண்ட பத்திரிக்கையாளர்கள் மிரண்டு விட்டனர்.

''ஜெயலலிதா அரசை நிம்மதியாகத் தூங்க விடமாட்டேன். இனிதான் எனது வலுவான தாக்குதல் வரும். இந்த மாநிலத்திற்கு சாபமாக இருக்கும் அரசிற்கு எதிராக மக்களைத் திரட்டுவேன். அது பற்றிய விவரங்களை இப்போது சொல்ல மாட்டேன்...

''வாஜ்பாயியையும் விடமாட்டேன். கனத்த இதயத்துடன் (உயர்வாக மதிப்பதால்) கடுமையாகத் தாக்குவேன்'' என்று குகையிலிருந்து வெளி வந்த சிங்கம் போல் பிடரியை சிலிர்த்துக் கொண்டார்.

சென்னையில் நடந்த நடைபயணத்தின் நிறைவு விழாவில் வழங்கப்பட்ட வீரவாளுடன் வைகோ: முதுகைச் சொறிந்து கொள்வதற்கா?



வாஜ்பாயி - அத்வானி தலைமையிலான பார்ப்பன பயங்கரவாத ஆட்சியில் மக்கள் மீது ஏவப்பட்ட கருப்புச் சட்டங்களையும் படுகொலைகளையும் நாடாளுமன்றத்தில் நியாயப்படுத்தும் பிரச்சார பீரங்கியாக செயல்பட்டவர் வை.கோ. முசுலீம்களின் மீதான குஜராத் படுகொலைகளையும் ஆள் தூக்கி 'பொடா' சட்டத்தையும், பி.ஜே.பி.யின் முன்னணி தளபதியாக நின்று ஆதரித்தவர்.

இவர்தான் இப்போது ஜெயலலிதாவின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகவும் நீர்த்துப் போன திராவிட கொள்கைகளுக்காகவும் கர்ஜனை செய்கிறார்.

பத்திரிக்கையாளர்கள் கேள்வி எழுப்பும் போது, 'பொடா' சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததுதான், தன் அரசி



படிப்பகம்

யல் வாழ்க்கையிலேயே செய்த மிகப் பெரும் தவறு என்றும், தவறுக்கு தலைவணங்கு ...ராகவும் பித்தலாட்டம் செய்கிறார். ஆனால், பா.ஜ.க.வுடன் கூட்டு சேர்ந்தது அரசியல் ரீதியில் தவறே அல்ல என்று இன்றளவும் பிரகடனப்படுத்துகிறார்.

தமிழகத்தை பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு காட்டிக் கொடுத்த இன துரோகிகளில் ஒருவர் தான் வை.கோ. இதற்கான பரிசாகத்தான், தே.ஜ.கூ.வின் மந்திரி சபையில் அவரது கட்சியினர் அங்கம் வகித்தனர். அப்படியிருந்தும் இவர் பொடா கைதியான அவலத்திற்குக் காரணம், பெரிய மீன் ஜெயலலிதாவை இழக்கத் துணியாத பி.ஜே.பி. மேற்கொண்ட ஒரு பார்ப்பன தர்மம்! வை.கோ.வுக்கும் இந்த ரகசியம் தெரியும். இதை வெளியில் சொன்னால், 'பொடா அரசியல் கைதி' என்ற அவருடைய ஒரே கை முதலும் காலியாகி விடும். அடுத்து, அரசியல் ஆண்டிகளின் தலைவர் பதவிக்குத்தான் அவர் போட்டியிட வேண்டியிருக்கும்!





நவராத்திரி திரைப்படத்தில் சிவாஜி ஒன்பது வேடம் போட்டுக் கலக்கியதைப்போல, நடைபயணத்தில் விவசாயியாக, கமாண்டோ படை வீரராக வேடம் போட்டுக் கொண்டு தொண்டர்களை அசத்திய வைகோ.

எனவேதான், தான் ஒரு 'பொடா கைதி' என்ற சுயபரிதாபத்தை குழைத்து குழைத்து எதிர்கால தமிழக முதல்வர் என்ற கனவு நாற்காலியை கலைநயத்தோடு இழைக்கிறார், வை.கோ.

சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருந்தபோது கூட கட்சி ஊழியர்களுக்கு 15,000 கடிதங்கள் எழுதியது, கட்சிக் கூட்டங்களில் வாசிக்க உரைகளை எழுதி அனுப்பியது என்று சிறையில் காலைக் கடன்களைக் கூட நேரம் தவறாமல் செய்தது கூட தமிழக மக்களின் விடுதலைக்கானது தான் என்று சத்தியம் செய்கிறார்.

தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுகளால் வாலிபத்தை இழந்தவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் ''வைத்திய திலகங்கள்'' போல, தமிழர்களின் வாழ்வில் 'ஒளியேற்ற' வந்தவர்தான் வை.கோ. தமிழர்களுக்கு விழிப்பு நிலையிலும் தூக்கத்திலும் தமிழின எதிரிகளை கண்டால் வரும் பயம், திராவிட சித்தாந்தத்தை

- தொடர்ச்சி 25 ஆம் பக்கம்

# வை.கோ.வின் நடைபயணம்: சுய விளம்பரத் தொடர் ஓட்டம்

நடிகர் ரஜினியின் கைவிடப்பட்ட புதுப்படம் ஜக்குபாய் விளம்பரம் அளவுக்கு சமீபத்தில் தமிழகத்தை கவ்விய விசயம், வை.கோவின் நடைபயணம்.

வை.கோ.வின் நடைபயணத்தை நேரடி வர்ணனை செய்த தமிழகச் சந்தைப் பத்திரிக்கைகள் மிகவும் திணறி விட்டன. வாசகர்களுக்கு எதை சூடு பறக்கக் கொடுப்பது? ''ஜெயலட்சுமி பட்சி'' பறந்த கதையையா? அல்லது வை.கோ. நடந்த கதையையா? என்று தடுமாறின. இருந்தும் பார்ப்பன பத்திரிக்கைகள், கத்தி மேல் நடப்பது மாதிரி பிரச்சினையை ஒருவாறு சமாளித்தன. பார்ப்பன அறிவு ஜீவிகள், பல திடீர் திருப்பங்களுக்கு மத்தியில் வை.கோ.வை செய்தி சந்தையில் சுடச்சுட விற்று விட்டனர்.

இதற்காக, ''நதிக்கரை டு கடற்கரை வரை'' வை.கோ.வின் உச்சக்கட்ட நடைபயண காட்சியை விறுவிறுப்பாக அமைத்து பத்திரிக்கை 'தொடர் சீரியலை' தேர்ந்த கலைநயத்தோடு சிறப்பாக முடித்தார்கள்.

வை.கோவின் நடைபயண ''வீர வரலாற்றை'' திரைக்கதை எழுதி இயக்கியவர்கள் மொத்தமாக கூலி எழுத்தாளர்கள்தான் என்றால், வை.கோ.வுக்கு இருக்கும் ஒரே அருகதையை, நாம் மறைத்த பாவத்திற்கு ஆளாவோம்!

வெறும் நடைபயணத்தை இந்தியா - பாகிஸ்தான் இறுதிக்கட்ட போர் போல், இறுதிவரை திகில் திருப்பங்களோடு துடிப்போடு அவர் கொண்டு சென்றார். இதற்காக அவர் வகுத்த வியூகங்கள், புரிந்த 'தியாகங்கள்' வலி நிறைந்தது! 'ரணம்' மிக்கது!

மக்கள் வேலையில்லாமல், உணவு இல்லாமல், குடிக்க தண்ணீர் கூட இல்லாமல் குழந்தை குட்டிகளுடன் வாழ்நாள் முழுக்க நாடோடிகளாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஏட்டில் எழுத முடியாத அந்தத் துயரங்களை வணிக ஏடுகளும் வானொளிகளும் புறக்கணிப்பது பற்றி வை.கோ.வுக்கு கவலையில்லை.

தலைச்சுமை வியாபாரிகள் கூட, தாம் வைத்திருக்கும் சரக்கைத்தான் கூவிக்கூவி விற்பார்கள். ஆனால், நடைபயணம் சென்ற வை.கோ. தன்னையே கூவிக் கூவி விற்றது, பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது. இவ்வேலையை தானே தனியாக செய்யாமல், 3000 தொண்டர்களையும் உடன் இழுத்துச் சென்று அவர்கள் காலையும் புண்ணாக்கியது சாதாரணமானதா?

www.padippakam.com

## சூஃபி மார்க்க தர்கா - மசூதி ஆக்கிரமிப்பு

# இந்து மதவெறியர்களின் நயவஞ்சகத் திட்டம்

அறிவிப்பு இல்லாமல், வழக்கம் போல் அடுத்த கட்டப் போரை துவக்கி விட்டனர், பார்ப்பன பயங்கரவாதிகள்.

அயோத்தி வழியில் மதுரா, காசி "இடிப்பு" செயல்திட்ட வரைபடங்களைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு அலைபவர்கள், அதற்கு முன்னோட்டமாக, இசுலாமிய மறை மெய்ஞ்ஞானிகளின் கல்லறைகளை, சர்வமத வழிபாட்டு இசுலாமிய தர்காக்களைக் குறி வைத்துத் தகர்க்கிறார்கள்.

குஜராத் மாநிலம், அகமதாபாத் நகர் அருகில் உள்ளது, பீர்ரானா கிராமம். அங்குள்ள இசுலாமிய சுபி "பீர் இமாம் ஷா பாவர்" கல்லறை தர்கா 600 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. சர்வ மதத்தினரும் வணங்கும் இந்த வழிபாட்டு தலம் இப்போது, ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., மற்றும் பஜ்ரங் தள் குண்டர்களின் பதுங்கு குழியாக, பாசறையாக மாறி விட்டது.

1931-ஆம் ஆண்டு வரை இவ்வழிபாட்டுத் தலம், முசுலீம் சயித் ஒருவரின் சட்டப்பூர்வ குடும்பச் சொத்தாக இருந்து வந்தது. அதன் அன்றாட நிர்வாகத்தில் கிராம இந்துக்களும் பங்கெடுத்தனர். இந்துக்களுள், குச் பட்டேல் என்ற இந்து உயர்சாதி வகுப்பைச் சேர்ந்த ஒரு கும்பல், சதி, சூழ்ச்சி மூலம் அதன் மொத்த அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டது. நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் அறக்கட்டளையை உருவாக்கி, அதன் 10 உறுப்பினர்களில் 7 பேரைத் தங்கள் சாதியிலேயே நியமித்துக் கொண்டனர்; வெறும் 3 பேர் மட்டுமே முசுலீம் உறுப்பினர்கள்! அதற்கும் கடந்த 15 ஆண்டுகளாகத் (முறையாக) தேர்தல் நடத்தவில்லை!

குறிப்பாக, 1992-ஆம் ஆண்டு அயோத்தியில் பாபர் மசூதியைத் தகர்த்த பிறகு, அதேவழியில் பார்ப்பன பயங்கரவாதிகள் இசுலாமிய சின்னங்களை இந்தியா முழுக்க தேடித் தேடி அழித்தனர். அதே அழிப்பு நடவடிக்கையை இங்கும் தொடர்ந்தனர்.

1993-இல் இந்த வழிபாட்டு வளாகத்துக்குள்ளேயே வி.எச்.பி., பார்ப்பன பயங்கரவாதிகள் "சாதுக்கள் சம்மேளனம்" என்ற போர்வையில் முசுலீம்கள் அழிப்பு வெறியாட்டத்திற்கான சதித்திட்டம் தீட்டினர்.

இதுநாள் வரையில் "ராம்லஷ்மண் காஜா", "கர்சன் காஜா" என்று அழைக்கப்பட்ட இதன் அறக்கட்டளை தலைவர்கள் "மகராஜ்" என்றும் "ஆச்சாரியர்" என்றும் "குரு மகராஜ், ஜெகத்குரு சத்பத் ஆச்சார்யா" என்றும் ஏராளமான புனைபெயர்களை சினிமா நடிகர்கள் போல் தங்களுக்குச் சூட்டிக் கொண்டனர்.

அதேபோல் தர்காவின் கல்லறை நினைவுச் சின்னங்களையும் தோண்டி பழைய இசுலாமிய மற்றும் அதன் வரலாற்று அடையாளங்களையும் அழிக்கின்றனர். மாற்றாக, புனையப்பட்ட இந்து அடையாளங்களையும் பார்ப்பன வரலாற்றையும் திணிக்கின்றனர்.

"ஷா பாவா" கல்லறை தர்கா என்ற இந்த வழிப்பாட்டுத் தலத்தின் இசுலாமிய பெயரையும் மாற்றி "பரிணாபத்" "சமாதி மந்தீர்" என்று கூச்சமில்லாமல் புதிய பெயரில் அழைக்கின்றனர். வழிபட வரும் யாத்திரீகர்களிடம் எல்லையேயில்லாமல் புளுகுகின்றனர். இந்து மதத்துக்கே முன்னோடியான வைதீக மதத்தின் வழியில் வந்த "சமாதி மந்தீர்" இது என்று சூடம் கொளுத்தி, மணியடித்துச் சத்தியம் செய்கின்றனர்.

இதற்காக, இந்த இசுலாமிய வழிபாட்டுத் தலத்திலிருந்த வரலாற்று ஆவணங்களையும் பழங்கால இசுலாமிய கலைப்பொருட்களையும களவாடி விட்டனர்.

- ஔரங்கசீப் மன்னனால் தர்காவுக்கு அளிக்கப்பட்ட 45 ஏக்கர் நில மானியப் பத்திரம் (நகல்) காட்சிக்கு வைத்திருந்தது, காணவில்லை. வெள்ளித் தகட்டில் பொறிக்கப்பட்ட பத்திரத்தின் மூல ஆவணம் மட்டும் இப்போது இருக்கிறது.

- இந்தக் கல்லறை தர்காவின் மூல கர்த்தாவாகிய "இமாம் ஷா பாவா" என்ற இசுலாமிய மறை மெய்ஞ்ஞானி


இசுலாமிய மறைவிளக்கங்கள் அழிக்கப்பட்டு, இந்து மத சுலோகங்களாலும், கடவுள் படங்களாலும், சின்னங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள தர்காவின் உட்புறம்.





படிப்பகம்

www.padippakam.com



இந்து மதவெறியர்களால் முள்வேலியிட்டுப் பிரிக்கப்பட்டுள்ள தர்கா-பள்ளிவாசல்.

எழுதிய குரானின் கையெழுத்து பிரதி களவாடப்பட்டு விட்டது.

● இசுலாமிய திருநாளான, மொகரத்தின் போது பயன்படுத்தப்படும் வெள்ளித் தகடுகளால் அலங்கரிக்கப்பட்ட மரப் பெட்டி திருடு போயுள்ளது.

● இத்தர்காவின் அறக்கட்டளைத் தலைவரான காலஞ்சென்ற சையத் தஸ்து உசைன் கல்லறை, இருந்த இடம் தெரியாமல் இடிக்கப்பட்டது.

● தர்காவின் சுவர்களில் பொறிக்கப்பட்டிருந்த இசுலாமிய மறைவிளக்கங்கள் அழிக்கப்பட்டு, இந்து மத சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்து மத, கடவுள்களின் படங்களும் மற்றும் ''ஓம்'' சின்னங்களும் புதிதாகத் தொங்கவிடப்பட்டுள்ளன.

● இசுலாமிய சடங்குகள், சம்பிரதாயங்கள் அகற்றப்பட்டு, அன்றாட வழிபாட்டிற்கு இந்துமத சடங்குகள் கடைபிடிக்கப்படுகின்றன.

● தர்கா வளாகத்திலிருக்கும் முசுலீம் பள்ளிவாசலை வேலியிட்டுப் பிரித்து, அதற்கு மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்பைத் துண்டித்தனர்.

● பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்த முசுலீம் சயித்துகளை போலீசை ஏவிக் கைது செய்து, சூறையாடல், கொள்ளையடித்தல் மற்றும் திருட்டு குற்றங்களைச் சுமத்தி, அவர்களைச் சிறையில் அடைத்தனர். கேள்விக்கிடமற்ற வகையில் இந்து மதவெறி மற்றும் அரசு எந்திரம் என்ற இரட்டைக் குதிரைகள் மீது சவாரி செய்கின்றனர், பார்ப்பன பயங்கரவாதிகள்.

முசுலீம்கள் ''கொள்ளை''யடித்ததாக கூறப்பட்ட பொருட்கள் என்ன என்ன தெரியுமா? கோயில் பிரசாதம்! வெல்லம், சர்க்கரை, தேங்காய்!

இந்த புகாரைக் கண்டு போலீசு பின்வாயால் சிரித்ததா என்பது நமக்குத் தெரியாது! பிறகு, போலீசு கும்பல் சுதாகரித்துக் கொண்டு புகாரை மாற்றி ''ஆயுதங்கள் திருடியதாக'' முசுலீம்கள் மீது வழக்கைப் பதிவு செய்தனர்.

● ஆண்டுதோறும் 'மொகரம்' தினத்தன்று இந்து - முசுலீம் மக்கள் இணைந்து நடத்தும் 'தஷியா'' என்ற கோலாகலமான ஊர்வலத்தை மிரட்டித் தடை செய்தனர், பார்ப்பன பயங்கரவாதிகள்.


இப்படி, முசுலீம் வெறுப்பில் குளிர் காயும் பார்ப்பன பயங்கரவாதிகளைக் கண்டு உயர்சாதி இந்துக்களில் கூட பலர் மனம் வெதும்புகின்றனர். ''அவர்கள் கும்பலாக இயங்குகிறார்கள். வி.எச்.பி., பஜ்ரங் தள் மற்றும் போலீசு, இந்தக் கும்பலை எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் போலீசு நிலையத்திற்குத் தூக்கிச் செல்லப்படுகிறார்கள். உண்மை வழிவந்தவர்கள் - ''சத்பந்தீஸ்'' என்று அவர்கள் சொல்லிக் கொள்வதற்கு அர்த்தம் எதுவும் இல்லை'' என்கின்றனர். ''வழிபாட்டு இடங்களில்தான் அவர்களால் குழப்பத்தை ஏற்படுத்த முடியும். எங்களுக்குள் (இந்து-முசுலீம்) கிராமத்தில் எந்தப் பிளவும் இல்லை'' என்கின்றனர்.

இதைத்தான், இன்னும் எஞ்சியிருக்கும் இந்த மக்களின் மதநல்லிணக்க மனநிலையைத்தான் இனிமேலும் நீடிக்க விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள், பார்ப்பன பயங்கரவாதிகள்.

சொந்த மதத்தின் இசுலாமிய அடிப்படைவாதிகளுக்கு எதிராக சர்வமத நல்லிணக்கத்தை தனது இறைநெறியாக கொண்டதுதான் இசுலாமிய சூஃபி மார்க்கம். இதைப் போதித்த இசுலாமிய மறை மெய்ஞ்ஞானிகளின் கல்லறை நினைவுச்சின்னங்களை அழித்து ஆத்திரமூட்டி, மொத்த முசுலீம் மக்களையும் முசுலீம் அடிப்படைவாதிகளின் முகாமுக்குத் தள்ளுகிறார்கள். இதன்மூலம் சங்கிலி தொடர் வெடிவிபத்து போல், ''குஜராத் பாணி'' கலவரத்தை இந்தியா முழுக்க நடத்துவதற்கு, பார்ப்பன பயங்கரவாதிகள் உறுதியான அடித்தளமிடுகிறார்கள்.

2002-ஆம் ஆண்டு குஜராத் கலவரத்தின் போது தொடங்கப்பட்ட இச்சதித் திட்டம், அதைத் தொடர்ந்து மத்திய பிரதேசம் - போஜ்சாலா, கர்நாடகம் - பாபாபூதான்கிரி, மகாராஷ்டிரம் - பிரதாப்கர் கோட்டையிலுள்ள அஃப்சல்கான் கல்லறை என்று எதிர்ப்பே இல்லாமல் வேகமாக முன்னேறுகிறது.

இந்து மதவெறிக் கும்பல் இடித்து நொறுக்கி விடத் துடிக்கும் பிரதாப்கர் கோட்டையில் உள்ள அஃப்சல்கான் கல்லறை.



மதச்சார்பின்மையையே தனது பிறப்புரிமையாக கொண்டதாக பசப்பும் இந்துத்துவ நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு எதிராக, சட்டவாத நிறுவனங்களுக்கு வெளியே பார்ப்பன பயங்கரவாதிகளை முறியடிக்கும்போது மட்டுமே இந்துத்துவாவாதிகளிடமிருந்து நிரந்தரமாக தப்பிக்க முடியும்.

● குணசேகரன்


படிப்பகம்

www.padippakam.com

# ஈராக் ஆக்கிரமிப்பு:

# அமெரிக்க இராணுவம் வந்தது முன்னே...
# கிறித்துவப் பாதிரிகள் வந்தனர் பின்னே..

“அன்று - எங்களிடம் நிலம் இருந்தது; அவர்கள் கையில் பைபிளுடன் வந்தார்கள். இன்று - எங்கள் கையில் பைபிள் இருக்கிறது. அவர்களிடம் நிலம் இருக்கிறது.'' - இது காலனியாதிக்கத்தின் கொடுமையையும் கிறித்துவ மதத்தின் ஆக்கிரமிப்பையும் விளக்கும் பிரபலமான ஆப்பிரிக்கப் பாடல். இது 200 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கதையல்ல. இன்றும் தொடரும் கதை.

மீண்டும் அவர்கள் கையிலே பைபிளுடன் கிளம்பி விட்டார்கள். அன்றைய ஆப்பிரிக்க நாடுகளைப் போலவே, இன்று ஈராக் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறது. ஆண்டவரின் நற்செய்தியைப் பரப்ப அமெரிக்காவிலிருந்தும் அதன் விசுவாச அடிமை நாடுகளிலிருந்தும் பாதிரியார்கள் ஈராக்குக்குப் படையெடுக்கிறார்கள். தெய்வீக ஆவி அவர்களை பாக்தாத்துக்கு அனுப்பியுள்ளதாகப் பெருமை கொள்கிறார்கள்.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பு தொடங்குவதற்கு முன்பாக, இப்'புனிதர்கள்' உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களுடன் ஜோர்டான் எல்லையில் காத்திருந்தனர். ஆக்கிரமிப்புப் போர் தொடங்கி சமிக்ஞை கிடைத்ததும், இவர்கள் ஈராக்கினுள் பாய்ந்தனர். கிறித்துவ மதப் பரப்பு நிறுவனங்களைச் சேர்ந்த இப்பாதிரியார்களும் பிரசங்கிகளும் தங்களை வர்த்தகர்களாக, தொழில் முனைவோராக, சேவைப் பணியாளராக, ஒப்பந்தத் தொழிலாளியாக வேடமிட்டுக் கொண்டு ஆக்கிரமிப்புப் போரினால் நிலைகுலைந்த பகுதிகளுக்குச் செல்கின்றனர். அங்கு நிலைமை சாதகமாக இருந்தால், வேடத்தைக் கலைத்துவிட்டு, அங்கிகளை அணிந்து கொண்டு உணவு - மருந்துப் பொருட்களை விநியோகித்து மதப் பிரச்சாரத்தைத் தொடங்குகின்றனர்.

அமெரிக்காவிலுள்ள தெற்கத்திய பரிசுத்த ஆவி திருச்சபையானது மத அடிப்படைவாத இயக்கமாகும். ஈராக்கில் நுழைந்து கிறித்துவ மதப் பரப்பு வேலைகளைச் செய்வதற்காக, வர்த்தகர்களாகவும் ஒப்பந்தத் தொழிலாளர்களாக வேடமிட்டுக் கொண்டு செல்ல தனியாக ஒரு பயிற்சி வகுப்பை அது நடத்துகிறது. இதன்படி தேர்வு செய்யப்பட்ட பாதிரியார்களுக்கு அது அரபு மொழியையும் கற்பிக்கிறது. இந்த உண்மைகள் அமெரிக்க வர்த்தக நாளேடான ''வால் ஸ்ட்ரீட் ஜர்னல்''-இலும் வெளிவந்துள்ளது.

தெற்கத்திய பரிசுத்த ஆவி திருச்சபையின் முன்னாள் தலைவரான பாதிரியார் பிராங்களின் கிரகாம், அதிபர் புஷ்ஷுக்கு மிகவும் நெருக்கமானவர். அமெரிக்காவில் நடந்த செப்.11 தாக்குதலுக்குப் பிறகு, ஈராக் மீது படையெடுக்க வேண்டும் என்று இவர் புஷ்ஷிடம் வலியுறுத்தி வந்தார். போர் தொடங்குமுன்னர், புஷ்ஷுடன் சேர்ந்து பிரார்த்தனை நடத்திய அவர், ''முகமது நபி ஒரு சாத்தான்; இசுலாம் சாத்தான்களின் மதம்'' என்று வெளிப்படையாகவே வெறியைக் கக்கினார். இப்போது இவர் போர் நிவாரண கிறித்துவ மிஷனரியின் தலைவராக உள்ளார். கடந்த ஆண்டில் மட்டும் இந்த நிறுவனம் ஈராக்கில் கிறித்துவ மதப் பரப்பு வேலைகளுக்காக ஏறத்தாழ 20 கோடி டாலர்களை வாரியிறைத்துள்ளது.

இன்று பாதிரியார் கிரகாமின் ஆட்கள், ஈராக்கில் உணவு - மருந்துப் பொருட்களை விநியோகிப்பதோடு அரபு மொழியில் தயாரிக்கப்பட்ட பைபிளையும், இயேசு அறிவுறுத்திய வாழ்வியல் கோட்பாட்டு நூல்களையும் விநியோகிக்கின்றனர். ''ஈராக்கிய மக்களின் இன்றைய அவல நிலைக்கு இசுலாம் தான் காரணம்; அதை விட்டு வெளியேறி கிறித்துவத்தைத் தழுவுங்கள்'' என்று உபதேசிக்கின்றனர். உணவுக்காகவும் மருந்துக்காகவும் கையேந்தி நிற்கும் ஈராக்கிய மக்கள் நிர்பந்தமாக மதம் மாறுகிறார்கள். அவர்களைக் கொண்டு ஆவியெழுப்பும் வழிபாட்டுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக, ஆக்கிரமிப்புக்குப் பிறகு அமெரிக்கப் பாதிரிகள் முதலாவது பரிசுத்த ஆவி திருச்சபையைத் தொடங்க முற்பட்டனர். அவர்கள் பாபிலோனிலிருந்து பாக்தாத்துக்கு வந்து கொண்டிருந்த போது, கடந்த பிப்ரவரியில் ஈராக்கிய போராளிகளால் குண்டு வீசிக் கொல்லப்பட்டனர். ''ஐயோ! காட்டுமிராண்டித்தனம்'' என்று அலறினார் போப்.

ஈராக்கிய போராளிகளால் கொல்லப்படும் பிணைக் கைதிகள் - ஒப்பந்தத் தொழிலாளர்களில் பெரும்பாலோர், கிறித்துவ மதப் பிரச்சாரகர்களே ஆவர். கடந்த ஏப்ரலில், தென் கொரியாவைச்

**பாக்தாத்தில் சர்ச் அருகே ஈராக்கிய போராளிகளால் குண்டு வீசித் தாக்கப்பட்ட கிறித்துவ மிஷனரி வாகனங்களைப் பார்வையிடும் அமெரிக்கப் பாதிரி.**





படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்த சில ஒப்பந்தத் தொழிலாளிகள் ஈராக்கியப் போராளிகளால் பிணைக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்டனர். சிலர் கொல்லப்பட்டனர். இவர்கள் தொழிலாளிகளாக வேடமிட்டு வந்த கிறித்து மதப் பிரச்சாரகர்கள் என்று அம்பலமானது. கடந்த மே மாதத்தில், மொசூல் நகரில் மாதா கோயிலுடன் ஒரு கிறித்துவப் பள்ளியைத் தொடங்க கொரிய பாதிரிகள் முற்பட்டபோது, அவர்கள் போராளிகளால் கடத்திச் செல்லப்பட்டு, திரைமறைவு பேரங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பானது, எண்ணெய்க்கான யுத்தம் மட்டுமல்ல; ஈராக்கின் சுதந்திரம், சுயாதிபத்தியம், கலாச்சாரம், இறை நம்பிக்கை, மரபுகள் - பாரம்பரியங்கள் ஆகிய அனைத்தின் மீதும் தொடுக்கப்பட்டுள்ள யுத்தம். ஆக்கிரமிப்புப் போருடன் கிறித்துவ மதப் பரப்புதலையும் இணைத்து 19-20-ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் பின்பற்றிய அதே கொள்கையைத்தான் இன்றைய அமெரிக்கக் காட்டுமிராண்டிகளும் பின்பற்றுகின்றனர். அன்றைய காலனியாதிக்க ஆட்சிகளை விட, இன்றைய புஷ் ஆட்சியில்தான் கிறித்துவ மதவெறியர்களும், மதக் கடுங்கோட்பாட்டுவாதிகளும் உயர் அதிகாரத்தில் வீற்றிருக்கின்றனர். அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான கண்டோலீசா ரைஸ், அட்டர்னி ஜெனரல் ஜான் ஆஷ்கிராப்ட் உள்ளிட்ட பலரும் கிறித்துவ மத அடிப்படைவாதிகளேயாவர். தெற்கத்திய பரிசுத்த ஆவி திருச்சபைகளின் தலைமை நிர்வாகியான ரிச்சர்ட் லேண்ட் என்பவர், "கிறித்துவ அடிப்படைவாதிகள் புஷ் நிர்வாகத்தில் அதிகாரத்திலும் செல்வாக்கிலும் உள்ளனர். நவீன காலத்திய வரலாற்றில் இது போல் எந்த நாட்டிலும் நடந்ததில்லை" என்று பெருமிதம் கொள்கிறார்.

அமெரிக்க அதிபர் புஷ் கூட அத்தகையதொரு கிறித்துவ அடிப்படைவாதிதான். ஈராக் மீதான ஆக்கிரமிப்பை பயங்கரவாதத்துக்கு எதிரான "புனிதப் போர்" என்றுதான் அவர் சித்தரிக்கிறார். சுதந்திரம் என்பது எல்லாம் வல்ல ஆண்டவர் அளித்த அருட்கொடை என்கிறார். ஈராக் மீது போர் தொடுக்குமுன்னர் "எனது தந்தையிடம் (சீனியர் புஷ்) நான் கலந்தாலோசிக்கவில்லை; மாறாக, உலகின் மிகப் பெரிய தந்தையாகிய ஏசுவிடம் நான் முறையிட்டு வேண்டினேன்" என்கிறார். வரப்போகும் தேர்தலில் புஷ்ஷுக்குப் போட்டியாக நிறுத்தப்பட்டுள்ள எதிர்த்தரப்பு வேட்பாளரான கெர்ரியும் இப்

**ஆக்கிரமிப்புப் போருடன் கிறித்துவ மதப் பரப்புதலையும் இணைத்து 19-20-ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் காலனியாதிக்க வாதிகள் பின்பற்றிய அதே கொள்கையைத்தான் இன்றைய அமெரிக்கக் காட்டுமிராண்டிகளும் பின்பற்றுகின்றனர்.**

புனிதப் போர் அவசியமானது என்கிறார். சுதந்திர வர்த்தகமும் மதச் சுதந்திரமும் பிரிக்க முடியாதவை என்கிறார், புஷ்ஷின் ஆன்மீக ஆலோசகரான பாதிரியார் கிரகாம். போருக்குப் பிறகு ஈராக்கில் புதிதாக 9 சர்ச்சுகளை நிறுவியுள்ளதாகப் பெருமையுடன் குறிப்பிடுகிறார், தென்கொரிய கிறித்துவ மினஷரியின் தலைவரான சன் மியாங் மூன்.

காலனியாதிக்கமும் கிறித்துவ மதப் பரப்புதலும் கட்டாய மத மாற்றமும் பின்னிப் பிணைந்தவை என்றாலும், இப்போது ஈராக்கில் அது புதிய பரிமாணத்துடன் மூர்க்கமாக நடக்கிறது. அதற்கு வலுவான காரணங்களும் உள்ளன என்கிறார் விஸ்கான்சிங் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை தலைவரான பால்போயர்.

"ஈராக் மீதான ஆக்கிரமிப்பை இஸ்லாத்துக்கு எதிரான புனிதப் போராகவே கிறித்துவ மதவெறியர்கள் கொண்டாடுகின்றனர். ஈராக்கையடுத்து, அரபு நாடுகளை ஆக்கிரமித்து, ஜெருசலேம் நகரை விடுதலை செய்யவேண்டும் என்றே அவர்கள் விரும்புகின்றனர். ஏனெனில், இவர்கள் இயேசுவின் இரண்டாவது வருகை எனும் பைபிள் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்துள்ளனர். இதுவெறும் நிழலாகத் தொடரும் கற்பனாவாதமாக அல்லாமல், மிக உயிராதாரமான நம்பிக்கையாக அவர்களிடம் நிலவுகிறது. இதுவே அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் அடிநாதமாக உள்ளது. இது உலக அமைதிக்கு அச்சுறுத்தலான அபாயகரமான போக்காகும்" என்று அவர் எச்சரிக்கிறார்.

அகண்ட பாரதக் கனவுடன் இந்து வெறி பாசிச பயங்கரவாதிகள் பாக். மீதும் முசுலீம்கள் மீதும் படையெடுப்பு நடத்துவதை தேசபக்தியாக்கிக் கொண்டுள்ளதைப் போலவே, அமெரிக்க கிறித்துவ மதவெறியர்கள் அமெரிக்க தேசப் பாதுகாப்பின் பெயரால், அரபு நாடுகளை ஆக்கிரமித்து இயேசுவின் இரண்டாவது வருகையை உறுதிப்படுத்துவதை தமது இலட்சியமாகக் கொண்டுள்ளனர். அமெரிக்காவின் புதிய நூற்றாண்டுக்கான போர்த் தந்திர திட்டம் கூட, வளைகுடா பிராந்தியம் முழுவதும் அரசியல் தூய்மைப்படுத்தலைச் செய்வதையும், இசுலாம் மதத்தைச் சீர்திருத்துவதையும் கடமைகளாகக் கொண்டுள்ளது. ஈராக் மீதான மறுகாலனிய ஆக்கிரமிப்பை மட்டுமின்றி, அதன் பின்னே மறைந்துள்ள கிறித்துவ மதவெறியர்களின் சதிகளையும் உலகெங்குமுள்ள உழைக்கும் மக்கள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். இல்லையேல், நம் கையில் பைபிள் இருக்கும்; அவர்கள் கையில் உலகம் இருக்கும்!

● பாலன்

**புஷ்ஷின் நெருங்கிய கூட்டாளியும் கிறித்துவ மதவெறியனுமாகிய பாதிரி ப்ராங்ளின் கிரஹாம்.**



## அறிவிப்பு

**அரசியல் - சித்தாந்த தெளிவு பெற பு.ஜ. இதழில் வெளிவந்த கேள்வி - பதில் பகுதி பெரிதும் உதவியாக இருந்தது என்றும் மீண்டும் இதைத் தொடங்குமாறும் பல வாசகர்கள் கோரி வருகின்றனர். வாசகத் தோழர்களின் கோரிக்கையை ஏற்று, கேள்வி - பதில் பகுதியை அடுத்த இதழிலிருந்து தொடங்கத் தீர்மானித்துள்ளோம். வாசகர்கள் தமது கேள்விகளை விரைந்தனுப்பக் கோருகிறோம்.**

*-ஆசிரியர் குழு*


படிப்பகம்

www.padippakam.com

# பிழைப்புவாதமே தலித்தியமாக... ஓட்டுண்ணிகளே தலைவர்களாக...

"புதிய ஜனநாயகம்" பத்திரிக்கைக்குப் பதில் என்கிற பெயரில் "தலித்துக்கள் x ம.க.இ.க." என்ற கட்டுரை மூலம் பல அறிவுகெட்ட கேள்விகளையும் வாதங்களையும் "தலித் முரசு" எழுதியிருக்கிறது என்று சொல்லி சில சான்றுகளைக் கடந்த இதழில் எழுதியிருந்தோம். எஞ்சிய சிலவற்றை இப்போது காண்போம்.

புதிய தமிழகம் கிருஷ்ணசாமி - அந்நிய ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்கள் பெற்றெடுத்த சொந்தப் பிள்ளை; விடுதலை சிறுத்தை திருமாவளவன் அந்நிறுவனங்கள் சுவீகரித்துக் கொண்ட தத்துப் பிள்ளை என்று பு.ஜ. எழுதியது. இது தலித் மக்களை "அரிஜன்" அதாவது "விபச்சாரியின் குழந்தைகள்" என்று காந்தி அழைத்ததைப் போன்று நயவஞ்சகச் சொல்லாடல், சாதி இந்துக்களின் சிந்தனை என்கிறது, "தலித் முரசு"

"அரிசனங்க என்று சொல்ல யாரடா நாயே!" என்று பாடல் எழுதி சேரி - ஊர் வேறுபாடின்றி, கிராம - நகர வேறுபாடின்றி தமிழ்நாடெங்கும் முழங்கும் தோழர்களைப் பார்த்து; சில ஆண்டுகளுக்கு முன்பு "அரிஜன்" என்று சொன்ன சங்கராச்சாரி படத்துக்கு பொது இடங்களில் செருப்பு மாலை போட்ட தோழர்களைப் பார்த்து - இப்படி ஒரு அவதூறு சொல்கிறார்கள். கிருஷ்ணசாமி, திருமாவளவன் அமைப்புகளுக்கும் அந்நிய ஏகாதிபத்திய தொண்டு நிறுவனங்களுக்கும் உள்ள தொடர்பு குறித்து இப்பொழுது தானா, பு.ஜ. எழுதுகிறது. பு.ஜ.வின் இந்த விமர்சனத்தை அவர்களே மறுக்காதபோது, இப்போதும் "தலித் முரசு" பு.ஜ.வின் விமர்சனத்துக்கு நேரடியாக மறுப்புக் கூறுவதைத் தவிர்த்து, காந்தியின் நயவஞ்சக, சாதி இந்து சொல்லாடல் என்றெல்லாம் எழுதித் திசை திருப்புகிறது.

இப்போதும் சொல்கிறோம், "தலித் முரசு" உட்பட இந்த அமைப்புகள் தங்களுக்கும் தன்னார்வக் குழுக்களுக்கும் எந்த உறவும் கிடையாது என்று பகிரங்கமாக அறிவிக்கத் தயாரா? அதேபோல, அரசியல் அல்லாத சொந்த விவகாரங்கள் சம்பந்தமான கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தமது அமைப்புகளில் கிடையாது, அப்படிப்பட்டவர்களைத் தமது அமைப்புகளில் சேர்க்க மாட்டோம் என்று அறிவிக்கத் தயாரா?

"தலித் முரசு" உட்பட இந்த அமைப்புகளுக்கும் ஏகாதிபத்தியத் தன்னார்வக் குழுக்களுக்கும் உள்ள பாசப் பிணைப்பை வெளிப்படுத்தும் வகையில் ஒரு ஆதாரத்தை இதே கட்டுரையில் எழுதியுள்ளார்கள். அண்மையில் மதுரையில் நடந்த தலித் கலைவிழாவைப் புறக்கணியுங்கள் என்று துண்டறிக்கை போட்டுவிட்டு, தலித் மக்களின் எதிர்ப்பைக் கண்டு ம.க.இ.க.வினர் ஓடி ஒளிந்ததாக "தலித் முரசு" எழுதுகிறது.

இந்த "தலித் கலைவிழா" என்பதே ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இறைஇயல் கல்லூரி என்ற கிறித்துவ நிறுவனத்தால் நடத்தப்படுவது. இந்த நிறுவன தலைவரான மோகன்லார்பியரின் அரவணைப்பில் உள்ள மேலைநாட்டவர் பாஸ்டியன் வைலாங்கோவும் அவரது மனைவியும் சேர்ந்துதான் திருமாவளவன், ரவிக்குமார், அ.மார்க்ஸ் போன்றவர்களுக்கு முன்னோடியாக இருந்து "தலித், தலித்தியம், தலித் விடுதலை, தலித் அரசியல்" ஆகியவற்றை உருவாக்கியவர்கள். இதை சில ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களை உண்மையான விடுதலை இயக்கத்திலிருந்து திசை திருப்பி "அடையாள அரசியலுக்குள்" முடக்கி வைக்கும் நோக்கத்துடன் ஏகாதிபத்திய கிறித்தவத் தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் தலித் கலை விழாவைப் புறக்கணிக்கச் சொன்னதில் என்ன தவறு?

இந்த உண்மைகளை மூடி மறைத்து விட்டு, அம்பேத்கரை ஏகாதிபத்தியத்தின் அடிவருடி, தேசதுரோகி என்று இந்து சனாதனவாதிகள் வசைபாடியதைப் போல, தலித் மக்களை ஏகாதிபத்திய அடிவருடிகள், கைக்கூலிகள் என்று எழுதி தலித் இயக்கத் தலைவர்களையும் கொச்சைப்படுத்தும் பார்ப்பனக் கூட்டம் என்று பு.ஜ.வுக்கு முத்திரை குத்துகிறது, "தலித் முரசு". "தலித் இயக்கத் தலைவர்களுக்கும் ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களுக்கும் உள்ள உறவு குறித்து நாம் எழுதுவதை வேண்டுமானால் அவர்கள் முத்திரை குத்தி ஒதுக்கலாம். ஆனால் அவர்கள் அமைத்த "தாழ்த்தப்பட்டோர் விடுதலை முன்னணி" என்ற "தலித்" இயக்கங்களின் கூட்டமைப்பு எதனால் கலைந்து போனது? ஏகாதிபத்தியத் தன்னார்வக் குழுக்களிடம் உறவு வைத்துக் கொள்வது குறித்து எழுந்த பிரச்சினை தானே அதற்குக் காரணம்? இந்த உண்மையை என்ன முத்திரை குத்தி ஒதுக்கி விடமுடியும்?

"சாதி ஒழிப்பிற்கான அடிப்படையோ, நடைமுறையோ கண்ணோட்டமோ இவர்களிடம் கிடையாது" என்று பு.ஜ. எழுதியதற்கு எவ்வித மறுப்போ, பதிலோ எழுதாத "தலித் முரசு" கட்டுரையாளர், அதை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு, சாதி ஒழிப்புக்கு ம.க.இ.க. ஒன்றும் செய்யவில்லை என்று சாதிப்பதற்கு எத்தணித்திருக்கிறார். ஆனால் சாதி ஒழிப்புக்கான செயல்திட்டம் தலித் அமைப்புகளிடம் கிடையாது என்பதைத் "தலித் முரசே" கூட ஒப்புக் கொண்டிருக்கிறது. சாதி ஒழிப்பிற்கான செயல்திட்டம் எதுவும் தலித் அமைப்புகளிடம் இல்லாததால் தான், 'தாழ்த்தப்பட்ட மக்களை தலித் அடையாளத்துடன் (சாதி அடிப்படையில்) தனிவாக்கு வங்கியாகத் திரட்டி வைத்திருக்கிறோம்; அதை ஒரு அரசியல் சக்தியாக அங்கீகரித்து அரசியல் அதிகாரத்தில் (தேர்தல் சீட்டுகளுக்கான) உரிய பங்களியுங்கள்' என்று திரும்பத் திரும்பக் கூச்சல் போடுகின்றனர். தலித் அல்லாத ஓட்டுக் கட்சிகள் தங்களை அங்கீகரிக்கவும், முற்போக்கு - புரட்சிகர - ஜனநாயக அமைப்புகள் இந்தக் கோரிக்கையை ஆதரிக்கவும் வேண்டும்; அவ்வாறு செய்யாதவர்கள் தலித்துகளுக்கு எதிரிகள், துரோகிகள் என்றும் கூச்சல் போடுகின்றனர்.

"தலித் மக்களைக் கண்டு பரிதாபப்படும் ம.க.இ.க.விடம் அது இருக்கிறதா? தமிழகத்தில் எத்தனை ஊர்களில் 'தோழர்கள்' சாதியை ஒழித்திருக்கிறார்கள்? சாதி ஆதிக்கம் செலுத்தும் இந்துக்களி


படிப்பகம்

www.padippakam.com

டம், சாதி - தீண்டாமையை இன்னும் நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் பகுதிகளில், இவர்களால் சாதி வெறியை ஒழிக்க முடிந்திருக்கிறதா? சாதி ஒழிப்பு குறித்து சேரி மக்களிடம் போதனை செய்யும் இவர்கள், சாதி ஆதிக்கம் செலுத்தும் சாதி இந்துக்களின் தெருக்களில் போய்ப் பிரச்சாரம் செய்ததுண்டா? கோயில் கருவறைக்குள் நுழைவதற்கு இருக்கும் துணிச்சல், சேரிக் கருவறைக்குள் நுழைந்து படுகொலை செய்யும் சாதி இந்துக்களை எதிர்ப்பதில் இல்லையே.



தமிழ் பாதுகாப்பு இயக்கம் சார்பாக சென்னையில் நடத்தப்பட்ட விழாவில் திருமாவளவனுக்குப் பொன்னாடை போர்த்தும் இராமதாசு. இந்தத் திடீர் நட்பு பா.ம.க.வின் வன்னிய சாதிவெறியைக் கரைத்து விடுமா?

இருந்திருந்தால், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலத்தில் - 'தேர்தலை நடத்திப் பார்ரா மாப்பிள்ளை' என அரசுக்கே சவால் விட்டுக் கொண்டிருக்கும் கள்ளர்கள் வசிக்கும் பகுதியில் சென்று, சாதி ஆதிக்கத்தை ஒழித்திருப்பார்களே! மேலவளவு படுகொலையைத் தடுத்து நிறுத்தியிருப்பார்களே.'' *(தலித் முரசு, ஏப். 2004, பக். 47)*

சாதியை, சாதி வெறியை இத்தனை ஊர்களில், அத்தனை பகுதிகளில் ஒழித்து விட்டோம் என்று ம.க.இ.க. மார் தட்டிக் கொள்ளவில்லை. ஆனால், தலித்துக்களை விடுதலை செய்வதற்கென்றே அவதாரம் எடுத்திருப்பதாகக் கூறும் தலித் தலைவர்கள் இதையெல்லாம் எங்கேயாவது சாதித்திருக்கிறார்களா? தலித்துகளுக்கு எதிரான மேலவளவு கொலைகாரர்களை அரவணைக்கும் சேதுராமனுடனும் வன்னியர்களின் தாக்குதலுக்கு வக்காலத்து வாங்கும் ராமதாசுடனும் தோளோடு தோள் உரசி கூட்டுச் சேர்ந்திருப்பதுதான் அவர்களின் சாதனை!

ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறமுடியும். கள்ளர் சாதி மக்கள் பெரும்பான்மையாக வாழும் உசிலை, ஆண்டிப்பட்டி, கம்பம் வட்டாரத்தில் 'தலித் தலைவர்கள்'' கூட துணிந்து தலைகாட்ட முடியாத இடங்களில் - தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத மக்கள் வாழும் பகுதிக்குள் தொடர்ந்து சாதி - தீண்டாமை எதிர்ப்பு இயக்கங்கள் நடத்தி வருவது எமது தோழமை அமைப்பான விவசாயிகள் விடுதலை முன்னணி மட்டும் தான்.

கோவை - காளப்பட்டியில் அருந்ததியர்களுக்கு எதிரான சாதிவெறித் தாக்குதலைக் கண்டித்து போராடியதற்காக போலீசு தாக்குதல், சித்திரவதைக்கு ஆளானது தாழ்த்தப்பட்ட சாதிப்பிறப்பாளர்கள் அல்லாத எமது தோழர்கள் மட்டும்தான். போலீசு நிலையங்களில் சாதிப் பெயரைக் கூற மறுத்து, சாதியற்றவர்கள் எனத் தம்மை அறிவிப்பதில் உறுதி குலையாத காரணத்துக்காகத் தாக்குதல்களை அனுபவிப்பதும் எமது தோழர்கள் மட்டும்தான். இதற்காகவே பள்ளி - கல்லூரிகளில் இட ஒதுக்கீடு, நிதி உதவி போன்ற சலுகைகளை இழப்பவர்களும் எமது தோழர்கள் மட்டும் தான். சாதி - தீண்டாமை எதிர்ப்பு இயக்கங்களில் பங்கேற்றதற்காக ஆண்டுக் கணக்கில் சிறையிலடைக்கப்பட்டிருப்பதும் தாழ்த்தப்பட்ட சாதிப் பிறப்பாளர்கள் அல்லாத எமது தோழர்கள் மட்டும் தான்.

இன்னும் ''தமிழ் மக்கள் இசை விழா நடத்திப் பம்மாத்து காட்டுவதாக'' ''தலித் முரசு'' கூறுகிறது. ஆனால் தமிழ் மக்கள் இசைவிழாவே பார்ப்பனர்களின் தீண்டாமையை எதிர்த்தது தான். ஒவ்வொரு ஆண்டு இசைவிழாவும், சாதி இந்துக்களின் கொடுமைக்குப் பலியான திண்ணியம் தலித் உட்பட தாழ்த்தப்பட்ட மக்களை, சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் திரளும் ஆயிரக்கணக்கான மக்கள் முன்பு இரத்த சாட்சியங்களாக நிறுத்தப்படுவதை ''தலித் முரசு'' அறியாதததா?

தனிப்பட்ட தோழர்களின் பிறப்பு சாதியைக் குறிப்பிட்டு எழுதி, இவர்கள்தாம் சாதியை ஒழிக்கப் போகிறார்களா என்று கேள்வி கேட்டு, ''ம.க.இ.க.வையும், இதன் தலைமையையும் தலித் மக்கள் சமரசமின்றி எதிர்க்க வேண்டியது கட்டாயம்'' என்று ''தலித் முரசு'' அறைகூவல் விட்டுள்ளது.

இதற்கெல்லாம் தலித் முரசே, அதன் ஆசிரியர் புனித பாண்டியனே பின்வருமாறு பதில் கூறியிருக்கிறார்.

''சாதியை ஒழிக்க முன்வருகின்றவர்களை எல்லாம் அவர்களின் சாதிப் பின்னணியை வைத்து விமர்சனம் செய்து கொண்டிருப்பது இன்றைக்கு எங்கு போய் முடிந்திருக்கிறது?... தந்தை பெரியாரையே சந்தேகப்பட வைத்திருக்கிறது.

''சாதி ஒழிப்புப் போராளிகளின் உண்மையான நோக்கத்தையும் செயல்பாடுகளையும்கூட - 'அது தலித்துக்கு எதிராகத்தான் இருக்கிறது' என்று ஆய்வு செய்து 'நிரூபித்துக்' கொண்டிருப்பதன் மூலம் இவர்கள் எதைச் சாதிக்கப் போகிறார்கள் என்று விளங்கவில்லை. ஒருவன் சாதியற்றவன் என்பதை அவனது சாதி ஒழிப்பு கருத்தியல்களும் சாதி எதிர்ப்புச் செயல்பாடுகளும்தான் தீர்மானிக்க வேண்டும்.

''ஆனால், அவனுடைய சாதி ஒழிப்புச் செயல்பாடுகளிலும் கூட


படிப்பகம்

தலித் எதிர்ப்பு உணர்வும் சுயநலமும் தான் மேலோங்கி நிற்கிறது என்று சொல்லிக் கொண்டே போனால், தலித் அல்லாத ஒருவன் தன்னை சாதி எதிர்ப்பாளனாக எப்படித்தான் நிரூபித்துக் கொள்வது? ஒருவன் இடுப்பை வளைத்து மன்னிப்புக் கேட்டால்கூட, என்னுடைய காலை வாருவதற்குத்தான் அவன் இடுப்பை வளைக்கிறான்; மன்னிப் புக் கேட்பது அவன் நோக்கமல்ல என்று சொல்லிக் குற்றம் சுமத்துப வர்களின் 'குற்றங்களை' யார் தண் டிப்பது? இது, எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது?

''முதலில், சமூகக் கொடுமை களை தலித் அல்லாதவர்கள் பார்த் துக் கொண்டு சும்மா இருக்கிறார் களே என்று சொல்வது. பிறகு அவர் கள் ஏதாவது செய்ய முன்வந்தால், அவர்கள் நமக்கு ரட்சகர்களாக, தலைவர்களாக ஆவதற்குத்தான் நமக்கு உதவி செய்வது போல நடிக் கிறார்கள் என்று கொச்சைப்படுத்து வது. இது போன்ற அணுகுமுறை, உண்மையான சமூக அக்கறையுள்ள வர்களின் செயல்பாடும் சிந்தனை யும் ஆகாது. சாதியை ஒழிக்க நீளும் ஆதரவுக் கரங்களை நாம் தட்டிவிட் டுக் கொண்டே இருப்போம் எனில், இது சாதி ஒழிப்பில் முடியாது; சாதிக்கு மேலும் உரம் சேர்ப்பதில் தான் சென்று முடியும்.'' *(தலித் முரசு, நவம்பர் 2002, பக். 36, 37)*

இப்படி ஊருக்கு உபதேசம் செய் யும் ''தலித் முரசு'' ஆசிரியர்தனது பத்தி ரிக்கையிலேயே நமக்கு எதிராகப் பின் வரும் அறிவுகெட்ட கேள்விகளையும் வாதங்களையும் பிரசுரித்துள்ளார்.

''முதலில், இவர்கள் அம்பேத் கரை தலைவராக ஏற்றுக் கொள்கி றார்களா? ஒருபுறம் தாங்கள் எதிர்க் கும் கருணாநிதி, ஜெயலலிதா, வாஜ் பேயி என அரசியல் கட்சியினரையே அட்டைப்படமாக வெளியிடும் இவர்களின் பத்திரிக்கை, புரட்சி யாளர் அம்பேத்கர் படங்களைத் தாங்கி வந்துள்ளனவா? மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் இவர்களுக்கு இணையாக அம்பேத்கரை நிறுத்தி யது உண்டா?'' *(தலித் முரசு, ஏப்ரல் 2004, பக். 47)*

அம்பேத்கரைப் பற்றி நமது கருத் துக்களைத் தெளிவாக ஏற்கெனவே பல முறை எழுதியிருக்கிறோம். அவரை ஒரு புரட்சியாளராக, பாட்டாளி வர்க் கச் சித்தாந்தவாதியாக ஒருபோதும் நாம் ஏற்றுக் கொண்டதில்லை. அதே

www.padippakam.com




**தாழ்த்தப்பட்ட மக்களை உண்மையான விடுதலை இயக்கத்திலிருந்து திசை திருப்பி ''அடையாள அரசியலுக்குள்'' முடக்கி வைக்கும் நோக்கத்துடன் ஏகாதிபத்திய கிறித்தவத் தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் தலித் கலை விழாவைப் புறக்கணிக்கச் சொன்னதில் என்ன தவறு?**

சமயம், பெரியாரைப் போல நாட்டின் மிகச் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாக மதிக்கிறோம். அவரிடம் நாம் ஏற்கக் கூடிய சில கருத்துக்கள் இருக்கும் அதே சமயம், ஆரிய இனத்தின் தோற்றம் - படையெடுப்பை மறுத்தது, இந்தியப் பூர்வகுடிகள் தாம் என்று அவர்களை ஏற்பது, தீண்டாமையின் தோற்றம் - உருவாக்கம் பற்றிய அவரது கருத்துக் கள், தீண்டாமை - சாதி ஒழிப்புக்கு அவ ரது தீர்வுகள், தேசிய இன - மொழி உரிமை மறுப்பு, முதலாளிய அரசியல் பொருளாதாரக் கருத்துக்களை ஏற்பது இப்படிப் பல பிரச்சினைகளில் அம் பேத்கரிடம் இருந்து மாறுபடுகிறோம். அப்படியிருக்கும்போது அம்பேத்கரை நமது தலைவராக ஏற்றுக் கொள் கிறோமா? மார்க்ஸ் - லெனினுக்கு இணையாக நிறுத்தியது உண்டா? என்ற கேள்விகள் எழுப்புவது எப்படி அறிவு பூர்வமானதாக இருக்கும்!

கருணாநிதி, ஜெயலலிதா, வாஜ் பேயி போன்றோரது படங்களை கேலிச் சித்திரமாக இகழ்ந்துதான் நமது பத்தி ரிக்கைகள் வெளியிடுகின்றன என்பது கூடப் புரியாமல் அம்பேத்கர் படங் களைத் தாங்கி வந்துள்ளனவா? என்று ஒரு கேள்வி எழுப்புகிறது ''தலித் முரசு''. கருணாநிதி, ஜெயலலிதாவைப் போல கேலி செய்து இகழ்ந்து அம்பேத் கர் படங்களைப் போடவேண்டும் என்று ''தலித் முரசு'' விரும்புகிறதா? அம்பேத்கருக்கு மாற்றாக அயோத்தி தாசரை முன்னிறுத்த முயலும் தமிழினத் தலித்தியவாதிகள் வேண்டு மானால் அப்படிச் செய்யட்டும்! நாம் அப்படிச் செய்யப் போவதில்லை.

தலித் அரசியல் பார்வையில் இருந்து (அது என்னவென்று அவர்க ளுக்கே தெரியாது) தன்னுடைய கருத் துக்களைச் சொல்லாமல் ம.க.இ.க.வின் அரசியல் நிலைப்பாட்டில் இருந்து சொல்லியிருப்பதாக (அது அப்படித் தானே இருக்கும், வேறு எப்படி இருக் கும்?) இன்னொரு அறிவு கெட்ட வாதத்தை எழுதுகிறது ''தலித் முரசு''.

''தலித் மக்கள், தங்கள் தலைவர் களின் செயல்பாடுகளுக்கு ஏற்ப அவர்களை ஏற்றுக் கொள்வதும், புறக்கணிப்பதும் அம்மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினை. ஆனால், அத்தலைவர்களிடம் ஒரேயொரு ஆக்கப்பூர்வமான தன்மையைக் கூட கண்டு, அதைப் பாராட்டத் துணிவில்லாத ம.க.இ.க.வுக்கு என்ன உரிமை இருக்கிறது?... தலித் அரசியலுக்கும், ம.க.இ.க. அரசிய லுக்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் கிடையாது. இரண்டும் இரு வேறு துருவங்கள். அப்படியி ருக்க, தலித் இயக்கங்களையும், தலித் தலைவர்களையும் தான் தோன்றித்தனமான முறையில் விமர் சனம் செய்ய - இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? *(தலித் முரசு, ஏப்ரல் 2004, பக். 47)* என்று கேட் கிறது.

இந்தக் கேள்விகளுக்கும் தலித் முரசு ஆசிரியரே எதிர்க் கேள்வி கேட்டி ருக்கிறார்.

''ஒரு தலித்தை இன்னொரு தலித்துதான் விமர்சிக்க வேண்டும்; தலித் அல்லாதவன் விமர்சிக்கக் கூடாது. தலித் தவறு செய்தாலும் - அதைச் சுட்டிக் காட்டக் கூடாது' என்று எந்த அம்பேத்கரிசத்தில் இருக்கிறது?'' *(தலித் முரசு, நவம்பர் 2002, பக். 37)*

இப்படி முன்பு கேள்வி கேட்ட அதே புனித பாண்டியன் இப்போது



படிப்பகம்

www.padippakam.com

நமக்கு உள்நோக்கம் கற்பித்துப் பின் வருமாறு எழுதுகிறார்.

பு.ஜ. கட்டுரை "தலித் மக்களுக்கான அமைப்பையும், தலித் மக்களுக்கான தலைமையையும் அழித்தொழிக்கும் சிந்தனையைக் கொண்டிருக்கிறது. பொது அரசியல் தளத்திலிருந்து புறக்கணிக்கப்பட்ட தலித் மக்கள், இதுவரை ஓட்டு வங்கிகளாக இருந்தவர்கள் - இன்றளவும் ஒரு அரசியல் சக்தியாக மாறி விடக்கூடாது என்பதில், ம.க.இ.க.வுக்கும் பெருத்த கவலை உள்ளது.

"வாய்ப்பு வசதி உடையவர்களின் ஆக்கிரமிப்பாக மட்டுமேஇந்திய அரசியல் இருக்கும்போது, இவ்விரண்டும் மறுக்கப்பட்ட தலித் மக்கள் - தேர்தல் அதிகாரம், ஆட்சி என்ற ஆடுகளத்தில் நுழைந்து விடக்கூடாதாம்.

"கருணாநிதியும், ஜெயலலிதாவும், தமிழக அரசியல் களத்திலிருந்து தலித் இயக்கத் தலைவர்களைப் புறந்தள்ளி ஒதுக்கியதைக் கண்டிக்காத ம.க.இ.க., தலித் தலைவர்கள் தமிழக அரசியல் களத்தில் நுழைவதைத் தடை செய்ய முயலுகிறது. 'தலித்' என்ற தனித்துவத்தை அங்கீகரிக்க மறுப்பதால்தான் - தலித் எதைச் செய்தாலும் அதைப் பரிகசிக்கும் ஆபாசத்தில் ஈடுபடுகிறார்கள். *(தலித் முரசு, ஏப்ரல் 2004, பக். 47)*

இங்கே தனித்துவம், அடையாளம் என்றெல்லாம் அவர்கள் பேசுவது சாதியத் தனித்துவம், சாதிய அடையாளத்தைத்தான். இத்தகைய சாதியத் தனித்துவம், அடையாளங்கள் அனைத்தையும் அழிப்பதுதான் தீண்டாமை, சாதியத்தை அழித்தொழிக்கும் என்று உறுதியாக நம்பும் நாம், அவற்றை அங்கீகரித்து ஆதரிக்க வேண்டும் என்பது முட்டாள்தனமானது.

அதைப்போலவே அரசியல் தளம், களம், அரசியல் சக்தி என்பதெல்லாம், ஓட்டுக் கட்சி அரசியலைக் குறிப்பவைதாம். இந்த ஓட்டுக்கட்சி அரசியலையே முற்றாகப் புறக்கணிக்கும் நாம், அதில் கிடந்து உருளத் துடிக்கும் தலித் தலைவர்களையும் அமைப்புகளையும் மட்டும் அங்கீகரிப்பது, ஆதரிப்பது என்னும் பிரச்சினையே கிடையாது. பிறகு அவர்கள் அந்த ஆடுகளத்தில் குதித்து என்ன செய்தால்தான் எங்களுக்கென்ன! 'தலித்' என்ற பெயரால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் செய்யும் துரோகம் மட்டுமே நாம் அக்கறைப்பட்டு அம்பலப்படுத்த வேண்டியது. அதைத்தான் நாம் செய்கிறோம்.

(தொடரும்)

## அரசியல் பிரச்சாரம் செய்தால் அடக்குமுறை!
## போலீசின் கொடுஞ்செயலுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்

**வி**வசாயிக்கு எலிக்கறி! தொழிலாளிக்குக் கஞ்சித் தொட்டி; மாணவருக்குக் கல்வி மறுப்பு! இளைஞருக்கு வேலை மறுப்பு! போலீசுக்கு சுயாட்சி! போராடினால் பொடா ஆட்சி! மறுகாலனியாக்கத்தையும் பார்ப்பன பாசிசத்தையும் முறியடிப்போம்" என்ற முழக்கங்களுடன் பரமக்குடியில் 8.9.04 அன்று விளம்பர தட்டி கட்டிய 'குற்றத்'துக்காக பு.மா.இ.மு. தோழர் பிரேம் குமாரை அடித்து இழுத்து சென்ற போலீசார், போலீசு நிலையத்தில் அவரது ஆடைகளை உருவி அவமானப்படுத்தி, ஆபாசமாக ஏசி மிருகத்தனமாக வதைத்துள் ளனர். "நீ என்ன சாதி?" என்று போலீசாரிடம், "கம்யூனிஸ்டுக்கு ஏது சாதி" என்று தோழர் கூறியதும், "எதிர்த்தா பேசற?" என்று போலீசார் கடுமையாகத் தாக்கி காலில் விலங்கு மாட்டி கொட்டடியில் அடைத்துள்ளனர்.

இக்கொடுஞ்செயலை அறிந்ததும் பு.மா.இ.மு., ம.க.இ.க. ஆகிய அமைப்புகள் போலீசு அடக்குமுறையை அம்பலப்படுத்தி நகரெங்கும் கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டின. மனித உரிமை அமைப்புகளும் வழக்குரைஞர்களும் இந்த விவகாரத்தில் தலையிடத் தொடங்கியதும், பீதியடைந்த போலீசு தோழரை மறுநாள் காலை விடுதலை செய்தது. அரசியல் பிரச்சாரம் செய்ததற்காக காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையை ஏவிய போலீசு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, பு.மா.இ.மு., ம.க.இ.க. ஆகிய அமைப்புகள் துண்டுப் பிரசுரங்கள், தட்டிகள் மூலம் பிரச்சாரத்தை மேற்கொண்டன. ஆனாலும் போலீசு குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அடிப்படை ஜனநாயக உரிமையை நசுக்கி அடக்குமுறை ஏவும் போலீசுக்கு எதிராக 21.9.04 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் எழில்மாறன், தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், தோழர் கதிரவன் (ம.க.இ.க.) திராவிடர் கழக சட்டத் துறை செயலர் தோழர் மகேந்திரன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மனித உரிமைப் பாதுகாப்புக் கவுன்சில், வி.வி.மு. அமைப்புகளின் முன்னணியாளர்கள் உரையாற்றினர். தனது கோர முகம் உழைக்கும் மக்களிடம் அம்பலப்பட்டுப் போனதால், ஆத்திரமடைந்த போலீசு, அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக, கண்டன உரையாற்றிய முன்னணியாளர்கள் உள்ளிட்டு 50 பேர் மீது பொய் வழக்கு சோடித்து தனது சூரத்தனத்தைக் காட்டியுள்ளது. போலீசு குற்றவாளிகளை அம்பலப்படுத்த இதன்மூலம் இன்னுமொரு வாய்ப்பு கிடைத்துள்ள உற்சாகத்தில் அடுத்த கட்ட போராட்டத்துக்குத் தோழர்கள் ஆயத்தமாகி வருகின்றனர்.

–பு.மா.இ.மு., பரமக்குடி.





படிப்பகம்

www.padippakam.com

# பாலஸ்தீனம்:

# இசுரேலின் இன அழிப்புப் போர்

பாலஸ்தீனர்களின் சுயாட்சி நடைபெறுவதாகக் கூறப்படும் காசா முனைப் பகுதியில் அமைந்துள்ள ரஃபா முகாம், மே மாதம் இரண்டாவது வாரத்தில் இசுரேலிய இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட பீரங்கிகளில் இருந்தும்; அமெரிக்கத் தயாரிப்பான "அபாசே" ஹெலிகாப்டர்களில் இருந்தும் வீசப்பட்ட குண்டுகள், ரஃபா முகாமைத் திறந்தவெளி சுடுகாடாகவும்; கான்கீரிட் குப்பை மேடாகவும் மாற்றின.

இம்முற்றுகையின் பொழுது, பாலஸ்தீன மக்களின் வீடுகள் மீது குண்டுகள் வீசப்படுவதைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க, இசுரேலிய இராணுவம் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்தவில்லை. மாறாக, நிராயுதபாணியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. இந்த ஒரேயொரு தாக்குதலில் மட்டும் 23 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ரஃபா முகாம் மீது ஒரு வார காலம் நடத்தப்பட்ட தாக்குதலில் 120-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இசுரேலிய இராணுவம் எத்துணை குரூரமானது என்பதற்கு இந்தத் தாக்குதலின் பொழுது சுட்டுக் கொல்லப்பட்ட சிறுவர்களின் சடலங்கள் சாட்சியமாக இருக்கின்றன.

● சாபேர் அபு லிப்டா என்ற 13 வயது சிறுவன் தண்ணீர் பிடிப்பதற்காகத் தெருவுக்கு வந்த பொழுது சுட்டுக் கொல்லப்பட்டான். இச்சிறுவின் முதுகைக் குறி வைத்து சுடப்பட்ட குண்டு, அவனின் இதயத்தைக் கிழித்துக் கொண்டு வெளியேறியது.

● அகமது என்ற 13 வயது சிறுவன் நெற்றிப் பொட்டில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான். அகமதுவின் நெற்றியைத் துளைத்துச் சென்ற குண்டு, மண்டை ஓட்டின் பின் பகுதியைப் பிளந்து வெளியேறி இருக்கிறது.

● அகமதுவின் சகோதரி 16 வயதான அஸ்மாவின் வலது காதை நோக்கிச் சுடப்பட்ட குண்டு, அவளின் மண்டை ஓட்டைத் துளைத்து, இடது காதைப் பிளந்து வெளியேறி இருக்கிறது.

"1967-இல் நடந்த அரபு நாடுகள் - இசுரேல் போரின் பொழுது, பாலஸ்தீனர்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைவிட, இந்த ரஃபா தாக்குதல் மிகக் கொடூரமானது" என்கிறார் ஜான் செரியன் என்ற பத்திரிகையாளர். பாலஸ்தீன மக்களுக்குச் சொந்தமான காசா முனை மீதும், மேற்குக் கரை மீதும் இசுரேல் யூத மதவெறி பாசிச அரசு நடத்தி வரும் ஆக்கிரமிப்புப் போர், ஈராக் மீது அமெரிக்கா நடத்தி வரும் ஆக்கிரமிப்புப் போருக்குச் சற்றும் குறைந்தது அல்ல.

### அமைதி ஒப்பந்தம் கந்தலானது

இன்று இசுரேல் என அழைக்கப்படும் நிலப்பரப்பு, 1948-க்கு முன்பு பாலஸ்தீன மக்களுக்குச் சொந்தமானதாக இருந்தது. இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, அன்றைய பாலஸ்தீனத்தில் குடியேறியிருந்த யூத மதவெறியர்கள், பிரிட்டன் ஏகாதிபத்தியத்தின் ஒத்துழைப்போடு, பாலஸ்தீன மக்களின் மீது ஒரு ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்து இசுரேலை நிறுவினர்.

அன்று நடந்த ஆக்கிரமிப்புப் போரின் காரணமாக, 13,80,000 பாலஸ்தீனர்கள் சொந்த நாட்டில் இருந்து அகதிகளாக, அண்டை நாடுகளுக்குத் துரத்தப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான பாலஸ்தீனர்கள், இசுரேலில் இருந்து வெளியேறி, ஜோர்டான் ஆட்சியின் கீழ் இருந்த மேற்குக் கரையிலும்; எகிப்து அரசின் கீழ் இருந்த காசா முனைப் பகுதியிலும் குடியேறினர்.

1967-இல் நடந்த இசுரேல் - அரபு போரின் பொழுது, காசா முனை மற்றும் மேற்குக் கரை பகுதிகளையும் இசுரேல் முழுமையாக ஆக்கிரமித்தது. இசுரேலின் இராணுவக் காலனி ஆதிக்கத்தில் இருந்து பாலஸ்தீனப் பகுதிகளை விடுதலை செய்யும் நோக்கம் கொண்ட பாலஸ்தீன மக்களின் முதல் எழுச்சி (இண்டிஃபதா) 1987-இல் தொடங்கியது. ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் நடந்த இந்த முதல் எழுச்சியைத் தொடர்ந்துதான், 1993-ஆம் ஆண்டு இசுரேலுக்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் உருவானது.




இந்த அமைதி ஒப்பந்த விதிகளின்படி, "இசுரேல் இராணுவம் காசா முனையில் இருந்தும்; மேற்குக் கரையில் உள்ள ஜெரிகோ பகுதியில் இருந்தும் 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆம் தேதியன்று முழுமையாக வெளியேறி விடும்; 1998-ஆம் ஆண்டு டிசம்பர் 13-ஆம் தேதியன்று காசா முனையிலும், மேற்குக் கரையிலும் சுயாதிபத்தியம் கொண்ட பாலஸ்தீன அரசு உருவாகி விடும்" என்றெல்லாம் கூறப்பட்


படிப்பகம்

www.padippakam.com

டது. ஆனால், இப்பொழுது காசா முனையிலும், மேற்குக் கரையிலும் நடப்பதோ நேர் எதிராக இருக்கிறது.

இந்த அமைதி ஒப்பந்தம் டாம்பீகமாக அறிவிக்கப் பட்ட பொழுதே, இது பாலஸ்தீன மக்களுக்கு நகரசபை நிர்வாக அதிகாரம் கொண்ட அமைப்பிற்கு மேல் எதையும் தரப்போவதில்லை என பு.ஜ.வில் அம்பலப்படுத்தியிருந்தோம். (பார்க்க. பு.ஜ. அக். 1-15, 1993) பு.ஜ.வின் கணிப்பு வறட்டுத்தனமானதல்ல என்பதை இப்பொழுது காசா முனையிலும், மேற்குக் கரையிலும் இசுரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் நிரூபிக்கின்றன.



இசுரேலிய இராணுவத்தால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட ரஃபா முகாம்; இடிபாடுகளுக்கிடையே தங்களின் உடமைகளைத் தேடும் பாலஸ்தீன பெண்கள்.

இசுரேலின் பிரதமர் ஏரியல் ஷரோன், "பாலஸ்தீனியர்களின் முதல் எழுச்சியை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதற்கு இசுரேல் கையாண்ட நரித்தனமான தந்திரம்தான் இந்த அமைதி ஒப்பந்தம்" என இப்பொழுது வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். இது மட்டுமல்ல, "காசா முனையில் தற்பொழுது நடத்தி வரும் 'தீவிரவாதத்துக்கு எதிரான போர்', 1948-இல் நடந்த 'இசுரேலிய விடுதலைப் போரின்' இரண்டாம் பாதி" எனக் குறிப்பிடுகிறார். அதாவது, காசா முனையிலும், மேற்குக் கரையிலும் தஞ்சம் அடைந்திருக்கும் பாலஸ்தீனர்களை அங்கிருந்தும் துரத்தியடித்துவிட்டு, யூதர்களை மட்டுமே கொண்ட ஓர் அகண்ட இசுரேலை அமைப்பது என்பதுதான் இதன் பொருள்.

இந்த அகண்ட இசுரேலை அமைப்பதற்கு, "மேற்குக் கரையிலும், காசா முனையிலும் வாழும் பாலஸ்தீன மக்களின் விவசாயப் பொருளாதாரத்தை அடியோடு நாசப்படுத்துவது; அமைதி ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட பாலஸ்தீன நிர்வாகத்தின் போலீசு, பாதுகாப்புப் படை உள்ளிட்ட அதிகார அமைப்புகளைத் தாக்கி நிர்மூலமாக்குவது; பாலஸ்தீன நிர்வாகத்திற்கு நெருக்கடி கொடுத்து, அராபத் மூலமே, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் சேராமல் தனியாகப் போராடி வரும் "ஹமாஸ்" என்ற முசுலீம் மத அடிப்படைவாத அமைப்பைச் சேர்ந்த போராளிகளை ஒழித்துக் கட்டுவது; அதேசமயம், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மீதும் தீவிரவாத முத்திரை குத்தி, அதன் தலைவர்களை இசுரேலிய இராணுவத் தாக்குதல்கள் மூலம் கொன்றொழிப்பது" என்ற நோக்கங்களோடு, கடந்த நான்கு ஆண்டுகளாக - அக்டோபர் 2000 தொடங்கி காசா முனையிலும், மேற்குக் கரையிலும் ஆக்கிரமிப்புப் போரை மிகத் தீவிரமாக நடத்தி வருகிறது, இசுரேல்.

## போரைத் தீவிரப்படுத்த இசுரேல் நடத்திய சதி

அமெரிக்கா, ஈராக் மீதும், ஆப்கானிஸ்தான் மீதும் போர் தொடுக்க "தீவிரவாதம்", "பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள்" எனக் காரணங்களை உருவாக்கியதைப் போல, இசுரேலும் பாலஸ்தீனியர்கள் மீதான தனது ஆக்கிரமிப்பு போரைத் தீவிரப்படுத்த ஒரு பதட்டச் சூழலை உருவாக்கியது.

முசுலீம்களும், யூதர்களும் புனிதமான இடமாகக் கருதும் ஜெருசலேம் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சினை இசுரேலுக்கும், பாலஸ்தீனர்களுக்கும் இடையே இன்னும் தீர்க்கப்படாமலேயே இருந்து வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, அப்பொழுது இசுரேல் நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஏரியல் ஷரோன், நூறு இசுரேலிய இராணுவச் சிப்பாய்கள் புடைசூழ, ஜெருசலேத்தில் அமைந்துள்ள மலைக் கோயிலை (Temple Mount) தரிசிக்கப் போவதாக அறிவித்தார். (இந்து மதவெறி அமைப்புகள் பாபர் மசூதி வளாகத்தினுள் செங்கல் பூசை நடத்த அதிரடி யாத்திரைகள் நடத்துவதை இதோடு ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்) எதிர்க்கட்சித் தலைவர் ஷரோனின் இந்தத் திட்டத்திற்கு, அப்பொழுது ஆளுங்கட்சியாக இருந்த தொழிலாளர் கட்சியும் அதன் அரசாங்கமும் முழு ஒத்துழைப்புக் கொடுத்தன.

ஒரு உதாரணத்திற்குச் சொன்னால், ஏரியல் ஷரோனை, நம் நாட்டு இந்து மதவெறியன் அத்வானி - மோடி கும்பலோடு ஒப்பிடலாம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஏரியல் ஷரோன் இசுரேல் இராணுவத்தில் இளநிலை அதிகாரியாக இருந்த பொழுது, கிப்யா என்ற பாலஸ்தீன கிராமத்தை பீரங்கிக் குண்டுகளால் தாக்கி தரைமட்டமாக்கினார். இந்தத் தாக்குதலில் 69 பாலஸ்தீனர்கள் உயிரோடு புதைந்து இறந்து போனார்கள்.

ஏரியல் ஷரோன் 1982-இல் இசுரேலின் இராணுவ மந்திரியாக இருந்த பொழுதுதான், இசுரேலின் அண்டை நாடான லெபனானை ஆக்கிரமித்து, அங்கிருந்த பாலஸ்தீன விடுதலை இயக்கப் பயிற்சி முகாம்களை அழிக்கத் திட்டம் போடப்பட்டது. அந்த ஆக்கிரமிப்புப் போரில், சப்ரா மற்றும் ஷடில்லா அகதி முகாம்களைச் சேர்ந்த 3,000 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இப்படிப்பட்ட இனப் படுகொலைகளை கடந்த ஐம்பதாண்டுகளாக நடத்தி வரும் ஷரோனைப் போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் எனக் கோரும் வழக்கு பெல்ஜியம் நாட்டு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.


படிப்பகம்

www.padippakam.com

''அகண்ட இசுரேல்'' என்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ள ஏரியல் ஷரோன் ஜெருசலேம் நகருக்குள் நுழைவதை எதிர்த்து பாலஸ்தீன மக்கள் மத்தியில் மட்டுமின்றி, உலகெங்கிலும் கண்டனக் குரல்கள் எழுந்தன.

எனினும், ஏரியல் ஷரோன், செப்.28, 2000 அன்று இராணுவப் பாதுகாப்போடு, ஜெருசலேத்தில் உள்ள அல் மர்வானி என்ற மசூதிக்குள் நுழைய முயன்றார். ஆனால், 200-க்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் ஷரோனை முற்றுகையிட்டு அந்த யூத மதவெறி பாசிஸ்டு மசூதிக்குள் நுழைவதைத் தடுத்து விட்டனர். இதையடுத்து, 1000 சிப்பாய்களைக் கொண்ட இசுரேலிய இராணுவப் படைப்பிரிவு, ஆர்ப்பாட்டக்காரர்களைச் சுற்றி வளைத்து, ரப்பர் குண்டுகளால் தாக்கியது. இந்தத் தாக்குதலில் 24 பாலஸ்தீனர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலைக் கண்டித்து காசா முனையிலும், மேற்குக் கரையிலும் பாலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டங்களைச் சாக்காக வைத்து, இராணுவ பீரங்கிகள் பாலஸ்தீன நகரங்களுக்குள் நுழைந்தன. தொடர்ந்து மூன்று நாட்கள் இசுரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 30 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

அமைதி ஒப்பந்தத்தின்படி, தங்களுக்கு சுய நிர்வாக அதிகாரத்தைத் தர மறுத்த இசுரேல், மீண்டும் இராணுவத் தாக்குதல்களைத் தொடங்கியதையடுத்து, பாலஸ்தீனத்திலும் இந்த ஆக்கிரமிப்புப் போருக்கு எதிரான இரண்டாவது எழுச்சி (இண்டிஃபதா) அக். 2000-இல் தொடங்கியது.

### இட்லரின் பாதையில் இசுரேல்

இசுரேல் இந்தப் போரை தற்காப்புப் போர் எனக் கூறுகிறது. ஆனால், இப்போர் இட்லரின் நாஜிப் படைகளைக் கூட இன அழித்தொழிப்பில் பின்னுக்குத் தள்ளிவிடும். ஷமிர் என்ற இசுரேலியப் பத்திரிகையாளர், பாலஸ்தீனத்தில் நடந்துவரும் இராணுவ நடவடிக்கைகளைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:

''... அந்தக் கிராமத்திற்குள் நுழைந்த இராணுவம், ஆண்களையும், பெண்களையும் தனித்தனியாகப் பிரித்தது; ஆண்கள், பிளாஸ்டிக் விலங்குகளால் கை விலங்கிடப்பட்டதோடு, அவர்களின் தலைகள் கறுப்பு நிற சாக்குகளால் மூடப்பட்டன. பின்னர் அவர்கள் ஆட்டு மந்தைகளைப் போல, அருகில் இருந்த கல் குவாரிக்கு ஓட்டிச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டனர்; சிலர் சித்திரவதை செய்யப்பட்டனர்; சிலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை இருபதாக இருக்கலாம். பின்னர், அக்கிராமத்தில் இருந்த வீடுகள் இராணுவ புல்டோசர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன; இது, பாலஸ்தீனத்தில் இன அழிப்பு நடைபெறும் இன்னுமொரு காலைப் பொழுது...''

இசுரேலின் நீதித்துறை அமைச்சராக இருக்கும் யோசேஃப் லாபிட்டின் சொந்த மனசாட்சியே உறுத்தியதோ என்னவோ, அவர், ''இசுரேல் இராணுவம் ரஃபா முகாம் மீது நடத்திய தாக்குதல், இரண்டாம் உலகப் போரின் பொழுது இட்லரின் நாஜிப் படைகள் நடத்திய அழித்தொழிப்பை எனக்கு நினைவுபடுத்தியது'' எனக் கூறியிருக்கிறார்.

இந்த இன அழிப்புப் போரை இசுரேல் தற்காப்புப் போர் என்றால், இட்லர் நடத்திய யூத அழிப்பும் கூட நீதியான போராகி விடும்.

இசுரேலைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பு வெளியிட்டுள்ள புள்ளி விவரமொன்றின்படி, கடந்த நான்காண்டுகளில், இந்த 'ஆக்கிரமிப்புப் போரில் 2,397 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுள் 460 பேர் சிறுவர்கள்.

''கடந்த மூன்றரை ஆண்டுகளில் ரஃபா முகாமில் மட்டும் 1,800 மேற்பட்ட பாலஸ்தீனர்களின் வீடுகள், இசுரேலிய இராணுவத்தால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதாக'' பாலஸ்தீனத்தின் வீட்டு வசதித் துறை புள்ளி விவரமொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த ஆக்கிரமிப்புப் போரின் முதல் ஆண்டில் மட்டும் (அக். 2000 - டிச. 2001) படுகாயமடைந்த 25,000 பேரில், பலர் குண்டடிப்பட்டுக் கண்களை இழந்தோ, கை கால்களை இழந்தோ முடமாகிவிட்டனர். இப்படி முடமானவர்கள் மருத்துவ வசதி இன்றியோ அல்லது வேலைக்குச் செல்ல முடியாமல் பட்டினி கிடந்தோ சாக வேண்டியதுதான். இப்படிக் கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கையை எதில் சேர்ப்பது?'' என இசுரேலின் டெல் அவிவ் பல்கலைக்கழகத்தில் மொழியியல் பேராசிரியராகப் பணியாற்றும் தான்யா ரீன் ஹர்ட் வினவுகிறார். மேலும், அவர், ''இந்த ஆக்கிரமிப்புப் போர் தொடங்கிய எட்டே மாதங்களுக்குள் 1,50,000 பாலஸ்தீன முசுலீம்கள், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இருந்து வெளியேறி, அண்டை நாடான ஜோர்டானில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துவிட்டதாக''க் குறிப்பிடுகிறார்.

இந்த வெளியேற்றத்தைத்தான் இசுரேலின் யூத மதவெறி பாசிசக் கும்பல் விரும்புகிறது. இரண்டாம் உலகப் போரின் பொழுது, யூத அழித்தொழிப்பிற்கு இட்லர் ''இறுதித் தீர்வு'' எனப் பெயர் சூட்டியதைப் போல, பாலஸ்தீனர்களைக் கட்டாயப்படுத்தி அவர்களின் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றுவதற்கு யூத பாசிச கும்பல் ''இறுதி இடமாற்றம்'' (Final Transfer) எனப் பெயர் சூட்டியிருக்கிறது.

பாலஸ்தீன விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் ஃபதா, ஹமாஸ், இசுலாமிய ஜிஹாத், அல்-அக்ஸா தியா

**இசுரேல் இராணுவத்தால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் பாலஸ்தீன இளைஞர்.**





படிப்பகம்

www.padippakam.com

கிகள் படை, பாலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி ஆகிய போராளி அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களைக் குறி வைத்துத் தாக்கி கொன்றொழிப்பதை, (Targeted killings) இசுரேல் இந்த ஆக்கிரமிப்புப் போரில் ஒரு நடைமுறை தந்திரமாக கடைபிடித்து வருகிறது. இதுநாள் வரை, இவ்வியக்கங்களைச் சேர்ந்த 135 தலைவர்களை இசுரேல் இராணுவம் ஏவுகணைகளை வீசியோ, ஹெலிகாப்டரில் இருந்து குண்டுகளை வீசியோ கொன்றொழித்திருக்கிறது.



இசுரேலிய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அமெரிக்க பெண் ரச்சேலின் நினைவு தினத்தையொட்டி, ரமல்லா நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

இசுரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக சட்டபூர்வ வழியில் போராடும் அமைதி இயக்கத்தினரைக்கூட இசுரேல் விட்டு வைப்பதில்லை. பாலஸ்தீனர்களின் வீடுகளை இசுரேல் இராணுவம் இடித்துத் தள்ளுவதை எதிர்த்து நின்ற ரசேல் என்ற அமெரிக்க இளம் பெண் புல்டோசர் ஏற்றிக் கொல்லப்பட்டார். பாலஸ்தீனத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற மருத்துவர் தாபெட் தாபெட்டும் ரசேலைப் போலவே மிகவும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இவ்வளவு ஏன் இசுரேலுடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரும், பாலஸ்தீன நிர்வாக அமைப்பின் அரசுத் தலைவருமான யாசர் அராபத்தையும், இதேபோல் கொன்றொழிப்போம் என இசுரேலின் பிரதம மந்திரி ஏரியல் ஷரோன் வெளிப்படையாகவே மிரட்டி வருகிறார்.

இசுரேலின் சட்டங்களுக்கே எதிரான இந்தப் பச்சைப் படுகொலை கொள்கைக்கு இடைக்கால தடை விதிக்கக் கோரி, மனித உரிமை அமைப்புகள் தாக்கல் செய்த மனுவை இசுரேலிய உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. டெல் அவிவ் பல்கலைக்கழகம் செப். 2003-இல், இசுரேலிய யூதர்கள் மத்தியில் நடத்திய கருத்துக் கணிப்பில், 75 சதவீத யூதர்கள், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களைக் கொன்றொழிப்பதை ஆதரித்துள்ளனர்.

ஜாஃபா ஆய்வு நிறுவனம், ''மேற்கக் கரையில் இருந்தும்; காசா முனையில் இருந்தும் பாலஸ்தீனர்களை வெளியேற்றலாமா?'' என்ற கேள்வியை முன்வைத்து நடத்திய கருத்துக் கணிப்பில், 46 சதவீத யூதர்கள் ''இறுதி இடமாற்றத்தை'' ஆதரித்துள்ளனர். இந்தக் கருத்தை பச்சையாகக் கேட்காமல், பூசி மெழுகிக் கேட்கும் பொழுது, 60 சதவீத யூதர்கள், பாலஸ்தீனர்களை வெளியேற்றுவதை ஆதரித்துள்ளனர்.

''இசுரேலில் வசிக்கும் பெரும்பாலான யூதர்கள், தங்களின் நாடு எதிரிகளால் சூழப்பட்டிருப்பதாகவும்; பாலஸ்தீனர்கள் தங்களைக் கடலில் தூக்கி எறிந்து விடுவார்கள் என்றும் நம்புகிறார்கள்'' எனக் கூறுகிறார், தான்யா ரீன் ஹர்ட். மேலும், ''அமைதி இயக்கத்தினரும், ஆக்கிரமிப்புப் போரில் ஈடுபட மறுக்கும் இராணுவத்தினரும் இசுரேலில் இருந்தாலும் அவர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினர்; மேற்குக் கரை மற்றும் காசா முனையில் இருந்து இசுரேல் இராணுவம் வெளியேற வேண்டும் என இவர்கள் கோரினாலும், பாலஸ்தீன சுயாதிபத்தியம், ஜெருசலேம், பாலஸ்தீன அகதிகள் திரும்புவது போன்ற கேள்விகளுக்கு இவர்களிடம் தீர்வு இல்லை'' என்கிறார் அவர்.

''பாலஸ்தீனப் பகுதிகள் மீது சரமாரியாக குண்டுகளை வீசி (Carpet Bombings) அழிக்க வேண்டும்'' என பென்னி ஈலான் என்ற இசுரேலிய அமைச்சர் வெளிப்படையாக திமிரோடு அறிவிக்கும் அளவிற்கு இசுரேலிய சமூகமும், இசுரேலிய அரசும் யூத மதவெறி பாசிசமயமாகியுள்ளன. அதனால்தான், பத்திரிகையாளர் ஷமீர், ''1945-க்குப் பின்பு ஜெர்மன் அரசில் நாஜிசம் களை எடுக்கப்பட்டதைப் போல, இசுரேலிய அரசிலும் நாஜிசத்தைக் களை எடுக்க வேண்டும்'' எனக் குறிப்பிடுகிறார்.

அதே சமயம் பாலஸ்தீன மக்களிடமோ, யூதர்களும், பாலஸ்தீனர்களும் சகோதரர்கள் போல, அக்கம் பக்கமாகவே வாழ முடியும் என்ற கருத்துதான் மேலோங்கியிருக்கிறது. பாலஸ்தீன மக்களின் முதல் எழுச்சி உச்சத்தில் இருந்த பொழுது, 1988-ஆம் ஆண்டு அல்ஜீயர்ஸில் நடந்த பாலஸ்தீன தேசிய கவுன்சில் மாநாட்டில், 1967-க்கு முன்பிருந்த எல்லை வரையறைகளின்படி பாலஸ்தீனமும், இசுரேலும் தனித்தனி அரசுகளாக அக்கம்பக்கமாக வாழ முடியும் என்ற தீர்மானத்துக்கு ஆதரவாக 253 வாக்குகள் கிடைத்தன; இத்தீர்மானத்திற்கு எதிராக விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை வெறும் 46 தான்.

பாலஸ்தீன அமைதி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாத, பாலஸ்தீன விடுதலை இயக்கம் - பி.எல்.ஓ.வில் அங்கம் வகிக்காத ஹமாஸ் என்ற முசுலீம் அடிப்படைவாத இயக்கமும் கூட, ''காசா முனையையும், மேற்குக் கரையையும் மட்டும் விடுதலை செய்வதே எங்களின் நோக்கம்'' என அறிவித்திருக்கிறது.

விடுதலையையும், அமைதியையும் விரும்பும் பாலஸ்தீன மக்களை, அதற்காகப் போராடும் விடுதலைப் போராட்ட வீரர்களை, இசுரேலும், அமெரிக்காவும் மேற்கு உலகமும் 'பயங்கரவாதிகள்' என அவதூறு செய்து அவமானப்படுத்துகின்றன. தென் ஆப்பிரிக்காவில் நடந்த நிறவெறி ஆட்சியைவிடக் கேடுகெட்ட காலனி ஆதிக்க ஆட்சியை, இசுரேல் அமெரிக்காவின் ஆசியோடு காசா முனையிலும், மேற்குக் கரையிலும் நடத்தி வருவதையும்; சுயாதிபத்தியம் கொண்ட பாலஸ்தீனம் என்ற தனிநாடு உருவாகி விடக்கூடாது என்ற நோக்கத்தோடு அமெரிக்காவும், இசுரேலும் கூட்டாகச் சேர்ந்து நடத்திவரும் சதித்தனங்களையும் அடுத்து பார்ப்போம்.

(தொடரும்)

## கருப்புப் பண ஆட்சி பகற்கொள்ளையே சாட்சி

கடந்த 17.8.04 அன்று மத்திய நிதி இணை அமைச்சர் பழனிமாணிக்கம், 30.9.2003 வரை வருமான வரித்துறையில் கணக்கு தாக்கல் செய்துள்ளோரில் ரூ. 10 லட்சத்துக்கும் அதிகமாக வருமானம் ஈட்டியவர்களின் பட்டியலை மாநிலங்களவையில் அளித்துள்ளார். ரூ. 10 லட்சம் இருந்தால் அவரை மில்லினியர் - லட்சாதிபதி என்பார்கள். ஆண்டுக்கு 46 லட்சம் பேர் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு விமானப் பயணம் செய்கிறார்கள். ஆனால் ரூ. 10 லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டியதாக நாடு முழுவதும் ஏறத்தாழ 70,000 பேர்தான் வரிகட்டுகிறார்கள். இந்தப் பட்டியல்படி, சென்னையில் 2,716, கோவை 512, திருச்சி 192, மதுரை 40 என மொத்தம் 3460 லட்சாதிபதிகள்தான் தமிழகத்தில் உள்ளனராம்!

இந்தியாவில் பளபளப்பான அதிநவீன கார்களுடனும் பகட்டான பங்களாக்களுடனும் பணத்தில் புரளும் கோடீசுவரர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒரு கோடிப் பேர் என்று முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளே மதிப்பிடுகின்றனர். ஆனாலும் வரி கட்டுபவர்கள் ஏறத்தாழ 70,000 பேர்தான்! 1947-லிருந்து 2004 வரை இதுதான் நிலைமை. அதாவது, வசதி படைத்தவர்கள் வரிகட்டுவதில்லை; அரசாங்கமும் கட்டாயமாக அவர்களிடம் வரி வசூலிக்கத் தயாரில்லை.

தேர்தல் முடிவுகள் வெளியானதும், காங்கிரசு கூட்டணி அரசு பதவியேற்கு முன்னரே பங்குச் சந்தை சூதாடிகளும் அன்னிய முதலீட்டு நிறுவனங்களும் பங்குச் சந்தையை வீழ்ச்சியடையச் செய்து நெருக்கடி கொடுத்ததும், காங்கிரசு அரசு அவர்களிடம் மண்டியிட்டு நின்றது. புதிய நிதியமைச்சர் ப.சிதம்பரம், மும்பையின் வர்த்தக மையமான தலால் தெருவுக்கு ஓடோடிச் சென்று கெஞ்சினார். உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது என்று இக்கருப்புப் பண கோடீசுவரர்களிடம் கைகட்டி நின்றது காங்கிரசு கூட்டணி அரசு. நிலைமை இவ்வாறிருக்க, ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியோடு ஒப்பிடும்போது, வரிவசூல் மிகவும் குறைவு என்று அங்கலாய்க்கிறார்கள் மத்திய அமைச்சர்கள். கருப்புப் பண முதலைகளின் காலடியில் கிடக்கும் இந்த ஆட்சியாளர்கள், சாமானிய மக்களை மேலும் கசக்கிப் பிழிந்து மறைமுக வரிகள் மூலம் அரசுக்கு வருவாயை ஈட்டுகின்றனர்.

57 ஆண்டுகால 'சுதந்திர' இந்தியாவில் முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் வர்த்தக சூதாடிகளும் வரி செலுத்தாமல் ஏய்த்து சுருட்டிய கருப்புப் பணத்தின் மதிப்பு ரூ. 4 லட்சம் கோடி.. அரசுத் துறை வங்கிகளிடமிருந்து பெரு முதலாளிகள் விழுங்கி ஏப்பம் விட்ட வாராக் கடன்கள், வட்டியும் அசலுமாக ரூ. 2 லட்சம் கோடி. இரகசிய சுவிஸ் வங்கியிலும் இன்னும் பிற வெளிநாட்டு வங்கிகளிலும் பதுக்கியுள்ள செல்வம் பல்லாயிரம் கோடி.

பெருமுதலாளிகளிடமிருந்து கருப்புப் பணத்தையும் வாராக் கடன்களையும் பறிமுதல் செய்ய முன்வராத ஓட்டுக் கட்சி ஆட்சியாளர்கள், வறட்சி நிவாரணத் திட்டத்துக்கு நிதியில்லை; வேலைக்கு உணவு திட்டத்துக்கு நிதியில்லை; குடிநீர் திட்டத்துக்கு நிதியில்லை என்று ஒப்பாரி வைக்கிறார்கள். உதாரணமாக, வேலை உத்தரவாத திட்டத்தை மிகமிகக் குறைந்தபட்சத் திட்டமாக செயல்படுத்த - வறுமையிலுள்ள 5 கோடிப் பேருக்கு ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலைதரும் திட்டமாக நிறைவேற்ற 5 x 100 x ரூ. 50 = ரூ. 25,000 கோடி தேவை. இவ்வளவு பெரிய தொகைக்கு அரசு எங்கே போக முடியும் என்று நம்மிடமே திமிராகக் கேட்கிறார்கள்.

ஹை-டெக் நகரமாகச் சித்தரிக்கப்படும் ஹைதராபாத்தில் ஏழைக் குழந்தைகளின் அவலம்: கருப்புப் பண ஆட்சிக்கு சாட்சியம்.



## கொலம்பியா: எண்ணெய்க்கு இரத்தம்! தொடரும் அமெரிக்க பயங்கரவாதம்

தென்னமெரிக்கக் கண்டத்தின் வடமுனையிலுள்ள நாடான கொலம்பியாவில், கடந்த ஆகஸ்ட் 5-ஆம் நாளன்று இராணுவப் படைகள் 3 பேரைச் சுட்டுக் கொன்றன. அவர்கள் தீவிரவாதிகளோ, பயங்கரவாதிகளோ, சதிகாரர்களோ அல்ல. மாறாக, அவர்கள் தொழிற்சங்க - விவசாய சங்க முன்னோடிகள். இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து இதுவரை 30-க்கும் மேற்பட்ட தொழிற்சங்கவாதிகளும் மனித உரிமை அமைப்புகளின் செயல்வீரர்களும் கொலம்பிய ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏன் இந்தக் கொலைவெறியாட்டம்? ஒரே பதில்: எண்ணெய்! கொலம்பியாவின் வடபகுதியான அராவ்கா பிராந்தியத்தில் பெருமளவு பெட்ரோலியம் கிடைக்கிறது. கொலம்பியாவின் அமெரிக்கக் கைக்கூலி அரசு, அடிமாட்டு விலைக்கு அந்த எண்ணெயை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. அமெரிக்காவின் பகற்கொள்ளையையும், கொலம்பிய அரசின் துரோகத்தையும் எதிர்த்து இப்பிராந்திய மக்கள் போராடி வருகின்றனர். புரட்சிகர ஐக்கிய முன்னணி (RUF) எனும் கொரில்லா போராளிகள், எண்ணெய்க் குழாய்களைத் தகர்த்து, அமெரிக்கக் கொள்ளைக்கு எதிராக ஆயுதமேந்தி போராடி வருகின்றனர். போராட்டத்தை ஒடுக்கி, எண்ணெயை தடையின்றி உறிஞ்சி கொள்ளையடிப்பதற்காகவே கொலம்பியாவில் இராணுவ பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

அராவ்கா பிராந்தியத்தின் பெருநகரங்கள் எங்

www.padippakam.com



கும் போலீசும் இராணுவமும் குவிக்கப்பட்டு "சிறப்பு பாது காப்பு" வட்டாரமாக அறிவிக் கப்பட்டுள்ளது. தெருவெங் கும் இராணுவ கவச வண்டி கள்; உயர்ந்த கட்டிடங்களில் எந்திரத் துப்பாக்கியுடன் போலீசார்; பெருந்திரளாக கைது, சித்திரவதை, கொலை கள் என்று இராணுவ பயங்கர வாதம் தலைவிரித்தாடுகிறது. கைது செய்யப்பட்டவர்கள் ஆள் காட்டிகளாகச் செயல் பட ஒப்புக் கொண்டால் விடு தலை கிடைக்கும். இல்லை யேல் சுட்டுக் கொல்லப்படு வார்கள். அமெரிக்காவின் சூறையாடலுக்கும் இராணுவ பயங்கரவாதத்துக்கும் எதிரா கப் போராடி வரும் தொழிற் சங்க, அரசு ஊழியர் - ஆசிரி யர் சங்க, மாணவர் சங்க முன்னோடிகளும் மனித உரிமை அமைப்பினரும் அடுத்தடுத்து இராணுவத்தால் கொல்லப் பட்டு வருகிறார்கள்.



"சதி" எனும் உடன்கட்டைக்கு வக்காலத்து வாங்கிய ஆணாதிக்க சாதிவெறியன் திலீப்சிங் ரத்தோர்: நேற்று "சதி"காரன், இன்று நீதிபதி!

இந்தக் கொலைவெறியாட்டத்துக்கும் எண்ணெய் குழாய் களைப் பாதுகாக்கவும் புஷ் அரசு கடந்த ஆண்டில் கொலம் பிய இராணுவத்துக்கு பயிற்சியளித்து வருகிறது. ஓசிடென் டல் பெட்ரோலியம் எனும் அமெரிக்க எண்ணெய் நிறுவனம், கொலம்பிய இராணுவத்தின் 18-வது பட்டாளத்தை தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டு தீனி போட்டு வளர்க்கிறது.

எண்ணெய்க்காக ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் மக் கள் தலைவர் கென்சரோவிவா படுகொலை, ஈராக்கில் ஆக்கி ரமிப்பு, கொலம்பியாவில் தொழிற்சங்க முன்னோடிகள் கொலை என்று வெறியாட்டம் போட்டு உலகை மேலாதிக்கம் செய்து வரும் அமெரிக்கக் காட்டுமிராண்டிகளுக்கு ஜன நாயகம் - மனித உரிமை பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது?

## கொலைகாரன் முதலமைச்சர்! "சதி"காரன் நீதிபதி! — இந்து ராஷ்டிரத்தின் மகிமை

1987-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள். தலைப் பாகை அணிந்த ராஜபுத்திர சாதிவெறியர்கள் கையிலே வாளும் துப்பாக்கியும் ஏந்தியபடி ஜெய்ப்பூர் நகர வீதிகளில் அன்று ஊர்வலமாகச் சென்றனர். ஜெய் சதிமாதா! என்று வெறிக் கூச்சலிட்டனர். ராஜஸ்தான் மாநிலம் தியோரலா கிரா மத்தில் ரூப்கன்வர் என்ற இளம்பெண், மாண்டுபோன அவளது கணவனோடு சேர்த்து செப்டம்பர் 2-ம் நாளன்று உடன்கட்டை ஏற்றப்பட்டாள். உயிரோடு எரித்துக் கொன்று விட்டு அப்பெண்ணை சதிமாதாவாகப் பூஜிக்கும் இக்காட்டு மிராண்டிகள், தமது சாதிய முறைப்படி 13-ஆம் நாளன்று கரு மாதி நடத்தும் விழாவைச் சட்டவிரோதமாக நடத்தினர். தடையை மீறி போலீசார் முன்னிலையிலேயே ஆயுதங்களு டன் ஊர்வலமாக வந்து, இது தமது சாதிய உரிமை என்று மார் தட்டிக் கொண்டனர்.

"சதி"யைக் கொண் டாடும் இந்த ஆணாதிக்க சாதி வெறியாட்டத்தைத் தடுக்கக் கோரி சில மகளிர் அமைப்பு கள் ராஜஸ்தான் நீதிமன்றத் தில் மனு செய்து நீதிபதியின் உத்தரவுக்காகக் காத்திருந்த னர். நீதிமன்றமோ சதி ஆத ரவு சாதிவெறியர்களால் நிரம்பி வழிந்தது. அவர்கள் நீதிமன்றத்திலேயே விசார ணையை நடத்தவிடாமல் கூச் சலிட்டனர். அவர்களில் முன் னணியாக விளங்கியவர்தான் திலீப்சிங் ரத்தோர் என்ற வழக் குரைஞர்.

சரியாக 17 ஆண்டுக ளுக்குப் பிறகு, 2004 செப்டம் பர் 2-ஆம் நாளன்று இவர், ராஜஸ்தான் உயர்நீதி மன்றத்தின் ஜோத்பூர் பெஞ்ச் நீதிபதி யாக மாநில பா.ஜ.க. அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்! நீதித்து றையையே இழிவுபடுத்தும் இக்காட்டுமிராண்டித்தனத்தை தடுக்கக் கோரியும், இந்த "சதி" ஆதரவு ஆணாதிக்க சாதிவெ றியரை நீதிபதியாக நியமிப்பது சட்டத்துக்கு எதிரான செயல் என்று வாதிட்டும் பல்வேறு மகளிர் அமைப்புகளும் மனித உரிமைக் குழுக்களும் அரசுத் தலைவர், உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி, மத்திய சட்ட அமைச்சர் ஆகியோரிடம் பல முறை முறையிட்டும்கூடப் பலனளிக்கவில்லை.

"சதி"க்கு எதிரான நீதிமன்ற உத்தரவுகளையோ, எமது சாதிய மரபுக்கு எதிரான உத்தரவுகளையோ ஒருக்காலும் ஏற்க மாட்டோம்" என்று நீதிமன்றத்திலேயே அன்று கூச்ச லிட்டவரை, "சதி" ஆதரவு கருமாதி ஊர்வலத்தில் பங்கேற்று முழங்கியவரை, உடன்கட்டையின் பெயரால் இளம்பெண் ணின் கொலையை நியாயப்படுத்தியவரை நீதிபதியாக நிய மித்து கௌரவித்துள்ளது, மாநில பா.ஜ.க. அரசு. இவர் மட்டு மல்ல; "சதி"யை ஆதரித்து ஊர்வலம் நடத்திய ராஜேந்திரசிங் ரத்தோர் என்பவர், பா.ஜ.க.வின் மாநில துணைத் தலைவராக வும் பொதுப் பணித்துறை அமைச்சராகவும் உள்ளார். "சதி"யைப் போற்றி, கருமாதி ஊர்வலம் நடத்தியதோடு, "சதி" மாதாவுக்கு கோயில் கட்டவும் கிளம்பிய 11 சதிகாரர் கள் மீதான குற்ற வழக்குகளை ரத்து செய்து கடந்த ஜனவரி யில் அவர்களைச் சிறப்பு நீதிமன்றம் விடுதலை செய்தது. அர சுத் துணைத் தலைவர் பைரோன்சிங் ஷெகாவத்தின் மருமகன் பிரதாப்சிங்கும் அவர்களுள் ஒருவர். இச்சதிகார தீர்ப்புக்கு எதிராகப் பல்வேறு மகளிர் அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத் தியதோடு, உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பை எதிர்த்து வழக்கு தொடுத்தன. ஆனால், மாநில பா.ஜ.க. அரசோ இத்தீர்ப்பை ஆட்சேபித்து உயர்நீதி மன்றத்தில் மனு செய்யக்கூட முன்வர வில்லை. சதிகாரர்களின் கூட்டாளியாகவே அது தன்னைக் காட்டிக் கொண்டது.

குஜராத்தில் இந்துவெறி கொலைகாரன் மோடிக்கு முதல மைச்சர் பதவி. ராஜஸ்தானில் "சதி"காரன் திலீப் சிங் ரத்தோ ருக்கு நீதிபதி பதவி. - இதுதான் இந்து ராஷ்டிர தர்மம்!



படிப்பகம்

www.padippakam.com

# கட்டாய இலவசக் கல்வி: கனவு மெய்ப்படுமா? கானல் நீராகுமா?

**முனைவர் ச.சீ. இராசகோபாலன்**

**"கட்டாய - இலவசக் கல்வி மசோதா-2004" என்ற மசோதா நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது. இம்மசோதா சட்டமாக்கப்பட்டால், அது இலவச மற்றும் தமிழ் வழிக் கல்விக்கே வேட்டு வைத்து விடும்; ஆங்கில வழி - தனியார் கல்விக் கொள்ளைக்குச் சட்டபூர்வ அங்கீகாரமளிப்பதாகி விடும்.**

**இம்மசோதா குறித்து கல்வியாளர்களிடையே விவாதம் நடந்துவரும் வேளையில், இன்றைய தமிழகத்தில் இலவசக்கல்வி - தமிழ்வழிக் கல்வியின் அவலநிலையையும், இந்நிலை தொடர்ந்தால் தமிழ் வழிக் கல்வியே தமிழ் நாட்டில் மறைந்து விடும் என்பதையும் புள்ளிவிபரச் சான்றுகளுடன் சுட்டிக் காட்டி எச்சரிக்கிறார், பிரபலக் கல்வியாளரான முனைவர் ச.சீ. இராசகோபாலன். பானை சோற்றைப் பதம் பார்த்தாற்போல, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 59 பள்ளிகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு அதிர்ச்சி தரும் உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளார்.**

அரசியல் சட்டம் 86-ஆவது திருத்தத்தின்படி கட்டாய இலவசக் கல்வி அளிப்பது அரசின் கடமையாகவும் குழந்தைகளின் உரிமையாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தக் கொண்டு வந்த மசோதா நிறைவேறுமுன் புதிய அரசு பொறுப்பேற்றுள்ளது. குற்றங்குறையுள்ள அம்மசோதா திருத்தப்பட்டு புதிய மசோதா தயாரிக்கப்படும் என்று நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார். இம்மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் முன்னர் பொது விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

1964-ஆம் ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. வரையும் 1978 முதல் 12-ஆம் வகுப்பு வரையும் கட்டணமில்லாக் கல்வியைக் கொணர்ந்து, இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் திகழ்ந்த தமிழகத்தில் இன்றைய இலவசக் கல்வி, தமிழ் வழிக் கல்வி ஆகியவற்றின் நிலையை ஆய்வது அவசியமாகின்றது. சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 59 பள்ளிகளில் சென்ற ஆண்டு ஆறாம் வகுப்புச் சேர்க்கையைப் பற்றிய புள்ளி விவரங்கள் பெறப்பட்டன. அவற்றில் 48 தனியார் உதவி பெறும் பள்ளிகள், 11 அரசுப் பள்ளிகள். மாநகராட்சிப் பள்ளிகளினின்று தகவல் பெறப்படவில்லை. 50 ஆண்டுகட்கு மேலாக சீரிய கல்விப்பணி ஆற்றி வந்த இப்பள்ளிகளில் நூற்றாண்டைக் கடந்தவையும், தெ.பொ.மீ; மு.வ. போன்றோரால் உருவாக்கப்பட்டவையும் அடங்கும். திரு.வி.க., அம்பேத்கர் ஆகியோரது பெயர்களைச் சூடிய பள்ளிகளும் உண்டு.

மொழிச் சிறுபான்மையோர் நடத்தும் மூன்று பள்ளிகளிலும், மதச் சிறுபான்மையோர் நடத்தும் ஒரு பள்ளியிலும் தமிழ் வழி வகுப்புகள் கிடையாது. ஒரு பள்ளியில் ஆங்கில வழி வகுப்பு இல்லை. பிற எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி வகுப்புகள் உண்டு.

மேற்கண்ட 59 பள்ளிகளில் 57448 மாணவ, மாணவியர் 6 முதல் 10-ஆம் வகுப்பு வரை படிக்கின்றனர். அவற்றில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தவர் எண்ணிக்கை 9955 ஆகும். அதாவது 17.3% தங்கல், விலகல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால், ஒரு பள்ளியின் மொத்த மாணவரில் 22 முதல் 25% மாணவர்கள் ஆறாம் வகுப்பில் இருக்க வேண்டும். இதன்படி ஏறத்தாழ 14,000 மாணவர்கள் ஆறாம் வகுப்பில் இருக்க வேண்டும். ஆனால், ஆறாம் வகுப்புச் சேர்க்கையில் ஏறக்குறைய 5000 மாணவர் குறைவாக உள்ளனர். தமிழ் வழியில் 3565 பேரும் ஆங்கில வழியில் 6390 மாணவரும் சேர்ந்துள்ளனர். ஆறாம் வகுப்பில் தமிழ் வழியில் 35.8% மாணவரே உள்ளனர். இப்புள்ளி விவரங்கள் சென்னை நகரில் இலவச, தமிழ் வழிக் கல்வியின் பரிதாப நிலையை எடுத்துக் காட்டுகின்றன.

அம்பேத்கார் பெயரில் உள்ள அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் ஐவரும் ஆங்கில வழியில் ஐவருமே சேர்ந்துள்ளனர். இதே நிலையிலுள்ள மற்றொரு அரசுப் பள்ளியும், நான்கு அரசு உதவி பெறும் பள்ளிகளும் மூடும் நிலையிலுள்ளன. மேலும், இரண்டு அரசு பள்ளிகள், ஒன்பது உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழி வகுப்புகள் மறையும் நிலையிலுள்ளன. இவற்றில் தெ.பொ.மீ தோற்றுவித்த இரு பள்ளிகளும், திரு.வி.க. தமிழ்க் கற்பித்த பள்ளியும், நூற்றாண்டைக் கடந்த பள்ளிகளும் உண்டு. மீதி 42 பள்ளிகளில், ஆறாம் வகுப்புச் சேர்க்கை மொத்த மாணவரில் 20%-க்குக் குறைவாக உள்ள பள்ளிகள் 25 ஆகும். இந்நிலை தொடர்ந்தால் அவையும் மூடுவிழாவிற்குத் தயாராகிவிடும். இரண்டே இரண்டு பள்ளிகளில் மட்டுமே தமிழ் வழி வகுப்புகளில் ஆங்கில வழி வகுப்புகளைவிடச் சிறிது கூடுதலாக மாணவியர் சேர்ந்துள்ளனர். பல பள்ளிகளில் தமிழ் வழி வகுப்பில் உள்ள மாணவர் எண்ணிக்கையைப் போல பலமடங்கு அதிகமாக ஆங்கில வழி வகுப்புகளில் உள்ளனர். எடுத்துக்காட்டாக, ஒரு பள்ளியில் தமிழ் வழியில் 40 மாணவியரும் ஆங்கில வழியில் 330 மாணவியரும் இவ்வாண்டு ஆறாம் வகுப்பில் உள்ளனர்.

இலவசக் கல்வி, தமிழ் வழிக் கல்வியின் வரலாற்றைக் காண்பது பயன் தரும். 1947-இல் சென்னை மாகாணம் முழுமையிலும் 20-க்கும் குறைந்த பள்ளிகளிலேயே ஆங்கில வழி வகுப்புகள் இருந்தன. பொதுவாக, ஒரு வகுப்பில் ஒரு பிரிவுதான் ஆங்கில வழி வகுப்பு. மற்றவை எல்லாம் தாய்மொழி அல்லது வட்டார மொழியில் கற்பிக்கும் பள்ளிகளே. ஆங்கில வழி வகுப்புகளில் வட்டார மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் சேர அனுமதி பெறவேண்டும். ஒரு அமைச்சரே தனது மகனை

***அன்பார்ந்த வாசகத் தோழர்களே,***

***இந்த இதழோடு உங்களது புதிய ஜனநாயகம் இதழ் 19-ஆம் ஆண்டை நிறைவு செய்கிறது. நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற உங்களது ஊக்கமான ஆதரவை அடித்தளமாகக் கொண்டு 20-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர உறுதியேற்கிறோம்.***




படிப்பகம்

www.padippakam.com

ஆங்கில வழியில் சேர்க்க இயலாத வகையில் அவ்விதிகள் கடைப்பிடிக்கப்பட்டது வரலாறு.

1947-லிருந்து 1962 வரை, நான்கு பள்ளிகளில் மட்டுமே ஆங்கில வழி வகுப்புகள் தொடங்க அனுமதிக்கப்பட்டன. அவற்றில் மூன்று, மொழிச் சிறுபான்மையோரால் நடத்தப் பெற்றவை. 1962-ஆம் ஆண்டில், தாலுகா தலைநகர்களில் அமைந்த மாவட்டக் கழக அல்லது நகராட்சிப் பள்ளிகளில் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கவும், தமிழினைத் தாய்மொழியாகக் கொண்டவர் ஆங்கில வழி வகுப்புகளில் சேர இருந்த நிபந்தனைகளைத் தளர்த்தியும் கூட பெற்றோரிடம் வரவேற்பினைப் பெறவில்லை. அன்று நான் தலைமையாசிரியராக இருந்த அவிநாசி கழகப் பள்ளியில் மூன்று பெற்றோரே ஆங்கில வழி வகுப்பில் தம் மக்களைச் சேர்த்திட முன்வந்தனர். அதனால், உள்ளாட்சி அமைப்புப் பள்ளிகளில் பெரும்பாலும் தமிழ்வழி வகுப்புகளே தனித்தியங்கின. இதனைக் கண்ட தனியார் உதவி பெறும் பள்ளிகள், தாங்கள் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்க அனுமதி வேண்டினர். அனுமதியும் கொடுக்கப்பட்டது.



**சைதாப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் இருக்கை வசதியின்றித் தரையில் அமர்ந்து படிக்கும் 9-ஆம் வகுப்பு மாணவர்கள்.**

தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகள் அனைத்தும் அங்கீகாரம் பெற்றவை, தமிழ்வழிக் கல்வியை மட்டுமே அளிப்பவையாக இருந்த காலம். தமிழ்நாடு முழுமைக்கும் ஒரே ஒரு தொடக்கப் பள்ளியில் மட்டும் ஆங்கில வழி வகுப்பு உண்டு. ஆங்கில வழி வகுப்புகளைத் தொடங்கிய உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில், ஆங்கில அறிவு பெறாது ஆறாம் வகுப்பில் சேர்கின்ற மாணவர்க்கு ஆங்கில வழியில் பாடங்களைக் கற்பிக்க இயலாதநிலை காணப்பட்டது. அவர்களில் பலரும் அங்கீகாரம் பெறாத, உதவிபெறாத கட்டண ஆங்கில வழித் தொடக்கப் பள்ளிகளை Feeder School என்ற பெயரில் பள்ளி வளாகத்திலோ, வெளியேயோ தொடங்கினர். உயர்நிலைப் பள்ளி நடத்தாத பலரும் இத்தகைய நர்சரி, ஆங்கில வழித் தொடக்கப் பள்ளிகளை அங்கீகாரம் ஏதும் பெறாது தொடங்கினார்கள். ஆங்கிலோ இந்திய ஆசிரியைகள், கான்வென்ட் நடைமுறைகள் போன்றவை மக்களை இப்பள்ளிகள் பால் ஈர்த்தன. 1978-இல் மெட்ரிக் பள்ளிகள் பல்கலைக் கழக மேலாண்மையினின்று தமிழக அரசின் பொறுப்பிற்கு மாற்றப்பட்ட பின்னர், இத்தொடக்கப் பள்ளிகள் மேலும் பலமடங்கு அதிகரித்து பரவின.

அரசு, உதவி பெறும் பள்ளிகளினின்று ஆங்கில வழிக்கல்வியை நாடி மெட்ரிக் பள்ளிகளை நோக்கிச் செல்லும் போக்கைத் தடை செய்ய, பள்ளிக் கல்வி இயக்குநர், அரசுப் பள்ளிகளிலும் தனியார் உதவி பெறும் பள்ளிகளிலும் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்க அனுமதி வேண்டினார். அரசாணை எண் 705 நாள் 25.05.1990-இல் அரசுப் பள்ளிகளிலும், அரசாணை எண் 585 நாள் 16.06.1993-இல் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் கீழ்க்காணும் நிபந்தனைக்கட்குட்பட்டு ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கிட அனுமதி வழங்கப் பெற்றது.

---

**– 9 ஆம் பக்கம்தொடர்ச்சி**

கைவிட்டவர்களின் பின்னால் சென்றதால் ஏற்பட்ட சக்தி விரயம், அசதி, மனக்குழப்பம், நெஞ்சு படபடப்பு, மேலும் திராவிட மறுமலர்ச்சியில் நாட்டமில்லாமை, இயலாமை, இந்துத்துவத்தால் தமிழினம் சிறுமை கண்டு துவண்டு போதல், சிடுசிடுப்பு போன்ற ஏராளமான தமிழினக் குறைபாடுகளுக்கு 11 ஆண்டு காலமாக தனியாக கடை நடத்தி 'தமிழின லேகியம்' விற்பவர்தான் வை.கோ.

தமிழ் மொழி ஆதரவு, ஈழத் தமிழர் ஆதரவு, சிறுபான்மையினர் நலன், காவிப்படை எதிர்ப்பு என்ற குளிகை மருந்துகளை அவ்வப்போது கூட்டியோ, குறைத்தோ மக்களுக்கு இலவசமாக மேடையிலேயே வீசுபவர்தான் வை.கோ. மேடை பிரசங்கத்தின் மூலமே தமிழகத்தின் நாடியைப் பிடித்துப் பார்க்கும் கலையில் தனித்திறமை வாய்ந்தவர்.

வை.கோ.வே சொல்வது போல், ''பேச்சுக் கலை என்பது ஒரு வரம்.'' ஆண்டவன் அருளால் அவருக்கு அது கைகூடி இருக்கிறது! அதுமட்டுமல்ல, அவரே கூறுவது போல், அவருடைய ''கடுமையான உழைப்பும்'' அதில் மறைந்திருக்கிறது. எட்டாவது வயதில் முதல் மேடைப் பேச்சு! பள்ளி நாடகங்களில் பிரதான பாத்திரங்களில் நடித்தது. கடைசியில் அறிஞர் அண்ணாவிடம் கற்றப் பாடம்!

இந்தத் தனித்திறமையால்தான், அவர் கருணாநிதியையே எதிர்த்து தனியாக, தமிழின அரசியல் கடையை திறந்தார். கருணாநிதியை விஞ்சும் வகையில் குறுகிய காலத்திலேயே இந்திய நாட்டை ஆளும் வைதீக பார்ப்பனர்கள் அனைவரும் கடையின் வாடிக்கையாளர் ஆகுமளவு நம்பகமான 'சூத்ர' முதலாளி ஆனார். அதனால்தான் 'அப்பழுக்கற்ற' வாஜ்பாயை வழிபட்டதைப்போல அன்னை சோனியாவையும் அவரால் வழிபட முடிகிறது!

மற்றபடி வை.கோ. தமிழர்களுக்கு என்ன செய்தார்? தமிழின விவசாயிகளுக்கு என்ன செய்தார்? நெசவாளிகளுக்கு என்ன செய்தார்? சிதைந்து போகும் சிறு தொழில்களை காக்க என்ன செய்தார்? அவர்கள் துயர் தீர்க்க என்ன கொள்கை வைத்திருக்கிறார் என்று பார்ப்பது எல்லாம் தமிழின துரோகிகள் செய்யும் வேலை!

அவரும் தன் நடைபயணம் முழுக்க வழி நெடுகிலும் இந்த அவலங்களைப் பார்த்தார். அதற்காக அன்னை சோனியாவை அவர் இப்போது விமர்சிப்பது நியாயமா? சோனியாவும் தேர்தலில் வாஜ்பாய் மாதிரி கவிழ்ந்து போனால், பிறகு கனத்த இதயத்துடன் சோனியாவுக்கு எதிராக மேடைதோறும் வெடிகுண்டுகளை வெடிப்பார்!

● பச்சையப்பன்

www.padippakam.com



**கூரை ஓடுகள் உடைந்துபோய் மாட்டுக்கொட்டகைபோல இருக்கும் திம்மாம்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளி.**

1. ஏற்கெனவே இயங்கிவரும் தமிழ்வழி வகுப்புகளில் எப்பிரிவையும் மூடவோ, தமிழ்வழி மாணவர்கள் எண்ணிக்கையினைக் குறைக்கவோ கூடாது. ஆங்கில வழி வகுப்புகள் கூடுதல் வகுப்புகளாக இருக்க வேண்டும். அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தனியே செய்து தர வேண்டும். அதாவது, தமிழ்வழி வகுப்புகளுக்கான வகுப்பறைகள், நூலகம், அறிவியல் கூடம் போன்றவற்றை ஆங்கில வழி வகுப்புகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. 2. புதிய பள்ளி தொடங்கினால் தமிழ் வழி வகுப்பு குறைந்தது ஒரு பிரிவு இருக்க வேண்டும். 3. ஒரு வகுப்பிற்கு ஒரு பிரிவும், ஒரு பிரிவில் 75 மாணவர்க்கு மிகாமலுமே ஆங்கில வழி வகுப்புகள் இருக்க வேண்டும். 4. ஆங்கில வழிகல்விக்குக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, அத்தொகை அரசுக் கருவூலத்தில் கட்ட வேண்டும். தனியார் பள்ளியைவிட அரசுப் பள்ளிகளில் அதிகக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. 5. அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த இயக்குநர் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். உதவி பெறும் பள்ளிக்கு மானியம் பெறும் ஆசிரியர் பணியிடங்கள் கொடுக்கப்படமாட்டாது.

இந்த ஆணைகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்று பார்த்தால் இலவசக் கல்வி மற்றும் தமிழ் வழிக் கல்வியின் சரிவிற்குக் காரணங்கள் விளங்கும். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பள்ளிகளில், 33 பள்ளிகளில் ஆறாம் வகுப்பில் 75-க்கும் மேல் மாணவர் சேர்க்கப்பட்டுள்ளனர். 8 பள்ளிகளில் 200-க்கு மேலும், இரண்டு பள்ளிகளில் 300-க்கும் மேலும் ஆங்கில வழியில் மாணவர் சேர்க்கப்பட்டுள்ளனர். இவற்றில் அரசுப் பள்ளிகளும் உண்டு. பல பள்ளிகளில் தமிழ் வழி வகுப்புகள் ஆங்கில வழி வகுப்புகளாக மாற்றப்பட்டுள்ளன. எத்தனைத் தனியார் உதவி பெறும் பள்ளிகளில், மானியம் பெறும் தமிழ் வழி வகுப்புகளுக்கான ஆசிரியர் பணியிடங்களை ஆங்கில வழி வகுப்புகளுக்குப் பயன்படுத்துகின்றனர் என்பது மற்றோர் ஆய்வுக்கு உட்படும். இவ்வாறாக, அரசாணையின் நிபந்தனைகள் காற்றில் விடப்பட்டன.

தற்பொழுது என்ன நடவடிக்கைகள் தேவை என்று பார்ப்போம். கடந்த பல ஆண்டுகளாக, தமிழ் வழி கற்பிக்கும் மாநகராட்சி மற்றும் உதவி பெறும் தொடக்கப்பள்ளிகள் ஏற்படுத்தப்படவில்லை. ஏற்கெனவே இருக்கும் பள்ளிகளும் தொய்வு நிலையிலுள்ளன. தமிழ் வழியில் கற்ற மாணவரின் எண்ணிக்கை கடந்த 25 ஆண்டுகாலமாக ஒரே நிலையிலுள்ளது. அதனால் ஆறாம் வகுப்பில் சேரப் போதுமான மாணவர் தொடக்கப் பள்ளியினின்று வருவதில்லை.

தரமான, தமிழ் வழிக் கல்வியை முறையாகக் கற்பிக்கும் பள்ளிகளாக அங்கீகாரம் பெற்ற பள்ளிகளை மேம்படுத்த வேண்டும். கல்லாதவர் யாருமில்லை என்ற நிலையை உருவாக்கிட வேண்டும்.

1992-இல் சிட்டிபாபு அவர்கள் தலைமையில் அமைக்கப் பெற்ற அங்கீகாரம் பெறாத நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளி ஆய்வுக்குழுவின் பரிந்துரைப்படி, எல்லா தொடக்கப் பள்ளிகளும் தமிழ் வழிக் கல்வி மட்டுமே அளிக்க வேண்டும்.

அங்கீகாரமில்லா பள்ளிகள் இயங்குவதைத் தடைசெய்ய வேண்டும். அப்பள்ளிகளினின்று வருகின்ற மாணவரை அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சேர அனுமதிக்கக் கூடாது. தனிப்படிப்புச் சேர்க்கை முழுமையாகக் கைவிடப்பட வேண்டும்.

எல்லா தனியார் பள்ளிகளும், உதவி பெற்றாலும் பெறாவிட்டாலும், தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். ●

---

**7-ஆம் பக்கத் தொடர்ச்சி**

குச் சென்று சந்திப்பதற்குக்கூட உயர்நீதி மன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. அனைத்துக் கைதிகளுக்கும் வழங்க வேண்டிய சட்டபூர்வ வாய்ப்புகளை மறுத்து, அடக்குமுறையை ஏவிவிட்டாலும் கூட, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தோழர்களின் மன உறுதியை அதிகார வர்க்கத்தால் அசைக்க முடியவில்லை.

மனித உரிமைகளுக்கான மக்கள் கூட்டமைப்பின் (பி.யூ.சி.எல்.) துணைத் தலைவர் முன்னாள் நீதிபதி ராஜேந்தர் சச்சர் தலைமையில் மனித உரிமை ஆர்வலர்கள் சென்னையிலும், வேலூரிலும் உண்ணாவிரதமிருந்த தோழர்களைச் சந்தித்து, ''இந்தக் கோரிக்கைகளுக்காக நாங்கள் வெளியே இருந்து தொடர்ந்து போராடுவோம்; எனவே, உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள்'' எனக் கேட்டுக் கொண்ட பின், மு.இ. அணி தோழர்கள் போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

மு.இ. அணி தோழர்கள் எழுப்பிய கோரிக்கைகள் நிறைவேறாமல் போயிருக்கலாம்; ஆனால், ''பொடா'' சட்டத்தை நீக்கிவிட்டதாக ஜனநாயக வேடம் போட்டுத் திரியும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் கபட வேடத்தையும், பின் தேதியிட்டு யார் மீது வேண்டுமானாலும் ''பொடா''வை ஏவலாம் என்ற அபாயம் நீடிப்பதையும் இப்போராட்டம் அம்பலப்படுத்திவிட்டது.

*- இந்திய மக்கள் வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் தமிழகக் குடியுரிமை பாதுகாப்பு நடுவம் அனுப்பியிருந்த பத்திரிகை செய்தியை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.*


படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

● 'புதியன புகுதல்' - தலையங்கக் கட்டுரை, வாரிசு அடிப்படையில் பெரு முதலாளித்துவ நிறுவனங்கள் புதிய இயக்குனரை நியமிப்பது போல, ஓட்டுக் கட்சிகளும் தமது வாரிசுகளை நியமித்து வருவதையும், இப்புதுமுகங்கள் அரசியல் வில்லன்களே என்பதையும் எடுப்பாக உணர்த்தியது. ரவுடிகள், பிக்பாக்கெட்காரர்களைப் படத்துடன் பட்டியலிட்டுப் பேருந்துகளிலும், பொது இடங்களிலும் எச்சரிப்பது போல, போலீசு துறை கிரிமினல்கள், பொறுக்கிகள், கொள்ளையர்கள் பட்டியலையும் படத்துடன் வெளியிட்டு, உழைக்கும் மக்களிடம் எச்சரித்து விளம்பரப்படுத்த புரட்சிகர இயக்கங்கள் முன் வரவேண்டும் என்ற எண்ணம்தான் 'தினவெடுத்துத் திரியும் தமிழக போலீசு' கட்டுரையைப் படித்தவுடன் எமக்கு ஏற்பட்டது.

*- வாசகர் வட்டம், சிவகங்கை.*

● செப்டம்பர் இதழைப் படித்த போது, நாடு முழுவதும் சுற்றி வந்த உணர்வு ஏற்பட்டது. அனைத்துத் தரப்பு மக்களும் தனியார்மய - தாராளமயத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிப்பதையும், போராடும் மக்கள் மீது அடக்குமுறை ஏவப்படுவதையும், ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தையும் விரிவாக அறிய முடிந்தது. குமுறிக் கொண்டிருக்கும் மக்கள் விரைவில் ஒரு எழுச்சியில் குதிப்பார்கள் என்பது மட்டும் உறுதி.

*- கயல்விழி, சென்னை.*

● புதிய தலைமுறையினர் அரசியலுக்கு வரும்போது, இவர்களாவது மக்களுக்கு நல்லது செய்ய மாட்டார்களா என்ற ஏக்கமும் எதிர்பார்ப்பும் ஏற்படுகிறது. ஆனால், அது புதிய சினிமா விளம்பரத்தைப் பார்த்து ஏமாந்த கதைதான் என்பதை அட்டைப்படக் கட்டுரை தொகுத்து விளக்கியது. சி.பி.எம். கட்சியின் பச்சோந்தித்தனத்தையும் மாணவர்கள் மீதான மே.வங்க 'இடதுசாரி' அரசின் அடக்குமுறையையும் 'இதுதான் இன்றைய இந்தியா' தோலுரித்துக் காட்டியுள்ளது.

*- வாசகர் வட்டம், திருச்சி.*

● பஞ்சாலைத் தொழிலாளர்களின் அவலநிலைக்கு ஓர் உதாரணமாக கொங்கரார் ஸ்பின்னர்ஸ் கட்டுரை அமைந்துள்ளது. பஞ்சாலைத் தொழிலில் நிலவும் நெருக்கடிகள், வேலையிழந்த தொழிலாளர்களின் அவலம், தொழிற்சங்கங்களின் துரோகம் ஆகியனவற்றைத் தொகுத்து ஒரு கட்டுரை வெளியிட்டால் உதவியாக இருக்கும். பு.ஜ. விற்பனையின்போது, இதுதான் இன்றைய இந்தியாவைப் படித்த ஒரு சி.பி.எம். கட்சி ஆதரவாளர், ''நீங்களும் கம்யூனிஸ்டு; நாங்களும் கம்யூனிஸ்டு; மே.வங்க ஆட்சியை இப்படிச் சாடினால், மக்களுக்கு கம்யூனிசத்தின் மீதே நம்பிக்கை போய்விடும்'' என்று அங்கலாய்த்துக் கொண்டார். 'தினவெடுத்துத் திரியும் போலீசு' கட்டுரை தமிழக மக்களின் கருத்தை தொகுப்பாக படம் பிடித்துக் காட்டியது. பேருந்து நிலையக் கடையில், பு.ஜ.வை வாங்கிப் படித்த ஒரு போலீசுக்காரர், பீதியுடன் அக்கம்பக்கம் பார்த்துவிட்டு, பு.ஜ.வை அங்கேயே வைத்துவிட்டு நழுவிச் சென்றார். உழைக்கும் மக்கள் உணர்வு பெற்றால், இனி போலீசார் முக்காடு போட்டுக் கொண்டுதான் நடமாட வேண்டியிருக்கும்.

*- வாசகர் வட்டம், கோவை.*

● தினவெடுத்துத் திரியும் போலீசை கிரிமினல்கள், ரௌடிகள், மாமா பயல்கள், ஓட்டுப் பொறுக்கிகள் ஆகியோரைத் தவிர வேறு எவரும் மதிப்பதோ, நம்புவதோ கிடையாது. நமது வரிப் பணத்தில் தின்று கொழுத்துவிட்டு நம்மை அடக்கி வரும் போலீசு அமைப்பையே கலைக்க வேண்டும் என்ற தீர்வு மிகச் சரியானது. மே.வங்க இடதுசாரிகளின் பொற்கால ஆட்சியில் பட்டினிச் சாவுகள் நடப்பது, அதன் மனிதத் தன்மையற்ற இழிந்த நிலையை உணர்த்துகிறது. குடிநீர் கொடுக்க வக்கின்றி, சுதந்திர தினத்தைக் கொண்டாட முற்பட்ட ஆட்சியாளர்களுக்கு எதிராக வி.வி.மு.வினர் நடத்திய போராட்டம், என் போன்ற இளைஞர்களுக்குப் பெரிதும் உணர்வூட்டியது.

*- செல்வக்குமார், நாராயணத் தேவன்பட்டி.*

● ''இராக்கிற்கு இராணுவ ட்ரக்குகளை அனுப்பாதே!'' என்ற முழக்கத்துடன் ஓசூர் லேலண்ட் ஆலை முன்பு பு.ஜ.தொ.மு. ஆர்ப்பாட்டம் நடத்திய போது, லேலண்ட் தொழிலாளர்களில் பலர் அதை அங்கீகரிக்கவோ, ஆதரிக்கவோ முன் வராமல் இருந்தனர். சில வாசகர்கள் கூட, ''நம்ம பிரச்சினைக்குப் போராடுவதை விட்டு, இராக் பிரச்சினைக்குப் போராடுவதா'' என்று தயங்கினர். ஆனால், அமெரிக்க இராணுவ சிப்பாய்களின் மனித நாகரிகத்துக்கு எதிரான வக்கிர வெறியாட்டம் பற்றிய செய்திகளையும் புகைப்படங்களையும் பார்த்த பிறகு, இந்த ஆர்ப்பாட்டம் மிகச் சரியானது, இன்னும் தீவிரமான போராட்டங்களை நாம் நடத்த வேண்டும் என்ற உணர்வுதான் மேலோங்கியுள்ளது. மே.வங்கத்தில் நடக்கும் பட்டினிச் சாவுகளும், மாணவர் போராட்டத்தின் மீதான அடக்குமுறையும், போலி கம்யூனிச ஆட்சியின் யோக்கியதையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. பு.ஜ.வை இன்னும் விரிவாக உழைக்கும் மக்களிடம் கொண்டு செல்ல நாங்கள் முயற்சித்து வருகிறோம்.

*- வாசகர் வட்டம், ஓசூர்*

● புதிய ஜனநாயகம் ஒவ்வொரு இதழும் விழிப்புணர்வூட்டி, போராட அறைகூவுவதாக அமைந்துள்ளது. தினவெடுத்துத் திரியும் போலீசு பற்றிய கட்டுரையின் ஒவ்வொரு வரியும் நூறு சதவீதம் உண்மையே. காவிரி நீரில் மைய அரசின் துரோகத்தை எதிர்த்து ஆகஸ்ட் 15-இல் நடந்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் முற்றிலும் நியாயமானது. புரட்சிகர அமைப்புகளின் போராட்டச் செய்திகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

*- வாசகர்கள், திருநெல்வேலி.*

● புதிய தலைமுறை அரசியல் வாரிசுகளைப் பற்றிய கட்டுரை, தமிழகத்தைக் கவ்வியுள்ள புதிய அரசியல் நோயை விளக்கிக் காட்டுகிறது. எந்தத் தகுதியுமில்லாத இப்புதிய தலைவர்களுக்கு ஒளிவட்டம் போட்டு வரும் பத்திரிகைகளையும் அம்பலப்படுத்தியிருந்தால் சிறப்பாக இருக்கும். ஏனெனில், ப.சிதம்பரத்தின் வாரிசு கார்த்தி உட்பட பல புதுமுகங்களை ஊதிப் பெருக்கி வியாபாரம் செய்வது இத்தகைய பத்திரிகைகள்தான்.

*- குணசேகரன், ஜெயங்கொண்டம்.*

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05
www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

"எஜுசாட்" என்ற கல்வி ஒளி பரப்பிற்கான செயற்கைகோளை சமீபத்தில் இந்திய அரசு விண்ணில் செலுத்தியிருக்கிறது. இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் அந்த வெற்றியைக் கொண்டாடுவதுதான் இந்தப் படம். ஆரம்பக் கல்வி தொடங்கி மருத்துவம், பொறியியல் கல்வி வரையிலும், கல்வி கற்பிப்பதில் இந்த செயற்கைகோளால் ஒரு புரட்சிகர மாற்றம் இனி ஏற்படும் என்று நம்மை நம்பச் சொல்கிறார்கள்.



கிராமப்புறங்களில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளிகள் பலவற்றில் ஒழுங்கான மேற்கூரையே இருக்காது. ஓட்டைக் கூரையை மாற்ற மறுக்கும் அரசாங்கமோ, பள்ளிக்கூடங்களில் ஒரு 'ஆண்டெனாவை' மாட்டிவிட்டால் போதும், 3,000 கிராமங்களுக்கு உலகத் தரம் வாய்ந்த கல்வி கிடைத்துவிடும் எனப் பம்மாத்து பண்ணுகிறது. கல்வி கற்பிப்பதில் மாற்றத்தைக் கொண்டு வரவுள்ள இந்தத் தொழில்நுட்ப புரட்சி, கல்வி தனியாரின் பிடியில் சிக்கிக் கொண்டு சீரழிந்து கிடக்கிறதே, அதையும் மாற்றி விடுமா?

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த 'கல்வி வள்ளல்' எஸ்.ஏ. ராஜா நடத்தும் பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள், அந்தக் கல்லூரியில் இருந்து தங்களை வேறு ஏதாவதொரு பொறியியல் கல்லூரிக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையோடு, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் முன் காத்துக் கிடப்பதுதான் இந்தப் படம். எஸ்.ஏ. ராஜா, தனது கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதில் செய்திருந்த முறைகேடுகள் அம்பலமானதால், அக்கல்லூரியின் பல்கலைக்கழக அங்கீகாரத்தை ரத்து செய்தது, அண்ணா பல்கலைக்கழகம்; அக்கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகளும் வெளியிடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை அண்ணா பல்கலைக்கழகம் பின்னர் ரத்து செய்து விட்டாலும், எஸ்.ஏ. ராஜா கல்லூரி மாணவர்கள், அக்கல்லூரியிலேயே தொடர்ந்து படிக்க விரும்பவில்லை. மாணவர்கள் போய்விட்டால் வருமானம் போய்விடும் என்பதால், கல்லூரி நிர்வாகம், இடமாற்றம் கோரும் மாணவர்களை அடியாட்களை வைத்து மிரட்டி வருகிறது.



கல்வி வியாபாரிகளின் இந்த ரவுடித்தனங்கள் ஒருபுறமிருக்க, கும்பகோணம் சாவுகள் தொடங்கி, கட்டாய நன்கொடையைக் கட்ட முடியாமல், தற்கொலை செய்து கொண்ட நல்லிப்பாளையத்தைச் சேர்ந்த மாணவி பிரியதர்ஷினியின் அகால மரணம் வரை, கல்வி வியாபாரிகள் மாணவர்களின் உயிரோடு விளையாடி வருவதற்கும் பல உதாரணங்களைத் தரலாம். கல்வித் துறையில் காணப்படும் இந்தச் சீரழிவு, அராஜகம் அனைத்தும், தனியாரின் பிடியில் இருந்து கல்வியை மீட்க வேண்டும் என்ற புரட்சியைத் தான் கோருகின்றன. ஆனால், அரசாங்கமோ ஒரு செயற்கைகோளைப் பறக்க விட்டுவிட்டு, அதைக் கல்விப் புரட்சி என்கிறது.

"எங்கள் கல்லூரியில் / பள்ளிக்கூடத்தில் செயற்கை கோள் வழியாகவும் பாடம் நடத்துகிறோம்" என விளம்பரம் செய்து, கல்வி வியாபாரிகள் மேலும் மேலும் கொள்ளையடிப்பதற்குத்தான் இந்த விஞ்ஞான சாதனை பயன்படுமேயொழிய, வேறு எதற்கும் பயன்படப் போவதில்லை. கல்விக் கொள்ளைக்கு இன்னுமொரு புதிய வழியைத் திறந்துவிட்டு, ஏழை மாணவர்கள் படிப்பதைக் காவு வாங்குவதைக் கல்விப் புரட்சி என்றா சொல்ல முடியும்?

படிப்பகம்